இக்கட்டான நிலையில் உள்ள தொழிலாளர்கள், இறந்தவரின் உடல் மற்றும் நட்ட ஈடு மீள் பெறுகை அல்லது நிலுவையான ஊதியங்களைத் தாய்நாட்டுக்கு அனுப்புதல்

மீளாய்வுக் காலத்தில் திரும்பி வருதலுக்கான விமான ரிக்கற்றுக்களைக் கெள்வனவு செய்வதற்கான நிதி உதிவிக்காக 75 பேர்களுக்கு தாய்நாட்டுக்கு அனுப்பும் செலவாக LKR 2.09 மில்லியன் செலவிடப்பட்டது. இதற்கும் மேலாக, இப்பிரிவு மரண நட்டஈடுகள், சம்பள நிலுவைகள் மற்றும் ஏனைய நிலுவைகளை இறந்த தொழிலாளர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பெற்றுக்கொள்வதற்கு உதவியது. 2016 இல், 295 மரண சம்பவங்கள் அறிவிக்கப்பட்டன என்பதுடன் மரணச்சடங்குகள் செலவுகள் மற்றும் பிரேதங்களை தாய்நாட்டுக்கு அனுப்புதலுக்காக LKR 11.55 மில்லியனை இ.வெ.வே.ப. செலவு செய்தது.

	2011		2012		2013		2014		2015		2016	
	சம்பவங்களின் எண்ணிக்கை	செலவு LKR (மில்.)	சம்பவங்களின் எண்ணிக்கை	செலவு LKR (மில்.)	சம்பவங்களின் எண்ணிக்கை	செலவு LKR (மில்.)	சம்பவங்களின் எண்ணிக்கை	செலவு LKR (மில்.)	சம்பவங்களின் எண்ணிக்கை	செலவு LKR (மில்.)	சம்பவங்களின் எண்ணிக்கை	செலவு LKR (மில்.)
அறிவிக்கப்பட்ட மரணங்கள்	302		289		303		315		312		295	
அனுப்புதலுக்கு செலுத்தப்பட்டது	23	03.947	26	6.69	36	10.45	22	04.95	25	06.49	16	04.05
மரணச் சடங்குகளுக்கு செலுத்தப்பட்டது	219	02.159	236	02.36	259	02.67	247	05.02	236	07.08	249	07.5
மொத்தம்	**242**	**06.106**	**262**	**09.05**	**295**	**13.12**	**269**	**09.97**	**261**	**13.57**	**265**	**11.55**

விசேட முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டமை

2016 இல். 691 பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் 581 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டன. இதற்கும் மேலாக, 145 பேர் சிறையில் வைக்கப்படுதலும் 139 வைத்தியசாலையில் அனுமதிக்கப்படலும் ஏற்பட்டன.

வெளிநாட்டுத் தொழிலாளர்கள் நலன்புரி நிதியம்

வெளிநாட்டுத் தொழிலாளர்களின் நலன்புரி நிதியத்தைக் (WWF) கண்காணிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது வெளிநாட்டுத் தொடர்புகள் நிதியத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். 2016 தை மாதம் முதல் மார்கழி வரை, சேகரிக்கப்பட்ட மொத்த தொகை LKR 527.31 மில்லியன் என்பதுடன் மொத்த செலவுகள் LKR 690.93 மில்லியன் ஆகும்.

உபசரிக்கும் நாடுகளில் தேவைப்படும் இலங்கையர்களுக்கு உதவி வழங்குவதற்காக வெளிநாடுகளில் உள்ள 16 இலங்கைத் தூதரகங்களின் தொழிற்பிரிவுகளில் 150 வீட்டு அடிப்படை மற்றும் உள்நாட்டு அடிப்படையிலான அலுவலகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

உபசரிக்கு நாட்டுக் காப்புறுதித் திட்டங்கள்

குவைற், கட்டார் மற்றும் ஐக்கிய அராபிய எமிறேட்ஸ் போன்ற உபசரிக்கும் நாடுகளால் இயக்கப்படும் காப்புறுதித் திட்டங்களை இப்பிரிவு கண்காணிக்கின்றது.

பிரதிநிதிக்குழுக்களை அனுப்புதலும் வரவேற்பதும்

2016 இல் 11 பிரதிநிதிக் குழுக்களை இ.வெ.வே.ப. பெற்றுக்கொண்டது. இ.வெ.வே.ப. 2011 - 2015 காலத்தில், அத்தகைய 50 பிரதிநிதிக்குழுக்கள் வரவேற்கப்பட்டன. 2016 இல், 59 பிரதிநிதிக் குழுக்கள் பின்வருபவை போன்ற நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்கு சென்றன:

- வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு கைத்தொழில்கள் மேல் அறிவையும் மிகச்சிறந்த நடைமுறைகளையும் பெற்றுக்கொள்ளல்
- தொழிற் பிரிவில் செயற்பாடுகளைப் பரிசோதித்தல்
- சர்வதேச கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மகாநாடுகளில் பங்குபற்றல

ரியாத், ஜெடா, குவைத், சைப்பிரஸ், அபுதாபி, டுபாய், ஓமான், கட்டார், ஜோர்தான், லெபனான் மற்றும் மலேசியாவிலுள்ள இலங்கை தூதரகங்களில் பாதுகாப்பான இல்லங்களை இ.வெ.வே.ப. பராமரிக்கின்றது. தனித்து இக்கட்டான நிலையில் உள்ளாகும் பெண் தொழிலாளர்களுக்கு இருப்பிட வசதி வழங்கவும் அவர்களுக்கு உணவு, வைத்திய உதவி, மற்றும் பாதுகாப்பை வழங்கும் நோக்கத்துடன் பாதுகாப்பான இல்லத்தை பராமரிப்பதன் நோக்கமாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இ.வெ.வே.ப. 2016 இல் இ.வெ.வே.ப. LKR 57.06 மில்லியனைச் செலவழித்தது.

நாடு	இக்கட்டான தனித்து நிற்கும் பாதுகாப்பான இல்லங்களில் இருப்பிட வசதி
அபுதாபி	136
டுபாய்	194
ஜெடா	81
ஜோர்டான்	57
குவைற்	1,318
லெபனான்	13
மலேசியா	11
ஓமான்	294
கட்டார்	433
ரியாத்	904
சைப்பிரஸ்	111
மொத்தம்	**3,552**



5 முதல் 17 வரை 2016 இல் எதியோப்பிய பிரதிநிதிக் குழு ஒரு கற்கைப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை புரிந்தது.

ஏனைய விசேட செயற்பாடுகள்

- புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் அபிவிருத்தித் தொடர்பான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்காக 11 அங்கத்துவ நாடுகளிலிருந்து கௌரவ. அமைச்சர்களின் பங்குபற்றலுடன் கொழும்பு காலி முக ஹொட்டலில் 2016 ஆவணி 25 இல் கொழும்பு செய்யொழுங்கு முறை அமைச்சுக் கூட்டம் நடைபெற்றது.

- 2016 செப்டம்பர் 19 முதல் 22 வரை ஓமானுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட MOU இன்படி ஒரு தொழில் மற்றும் பயிற்சி தொடர்பான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்காக ஓமானிலிருந்து ஒரு பிரதிநிதிக் குழு தொழில்நுட்ப இணைக் குழுக் கூட்டத்துக்கு இலங்கைக்கு வந்தது.

- உத்தியோக வருகைகள் தொழிற் பிரிவுகளால் இணைக்கப்படுகின்றது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் கௌரவ.தலதா அத்துக்கொரளயின் தலைமையில் இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகத்தால் இணைக்கப்பட்டது. பிரதிநிதிகள் குழு 2016 ஆவணி 25 முதல் 28 வரை இஸ்ரேலுக்கு விஜயம் செய்தது இந்த விஜயத்தின்போது, கௌரவ அமைச்சர் இஸ்ரேல் விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ.யுறி ஜெகுடா எறியல் ஹக்கொஹென், வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள் மற்றும் சனத்தொகை மற்றும் குடிவரவு அதிகார சபையின் அதிகாரிகளுடனும் (PIA) விவசாத் தொழிலாளர்களின் பருவகால ஆட்சேர்ப்பை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் பற்றி ஆராய்ந்தனர். இலங்கையர்கள், இஸ்ரேலில் தொழில் புரிவதற்கு விசாவைப் பெறுவதற்கு முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு ஒரு நுட்பத்தைக் கண்டறிவதற்காகவும் கலந்துரையாடல்கள் PIA உடன் நடத்தப்பட்டன என்பதுடன் மேலாக இஸ்ரேல்-இலங்கைர் சமூகங்களுடனும் இஸ்ரேல் ஆட்சேர்ப்பு முகவர்களுடனும் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இஸ்ரேல்

அநேக இலங்கையர்கள் தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் பிந்திய வரையலிருந்து வேலை தேடுகின்றார்களென்பதுடன் திருப்திகரமான வாழ்க்கையை ஏற்படுத்தினர்.இது அதிக எண்ணிக்கையான இலங்கையர்கள் இஸ்ரேலுக்குச் செல்வதில் அதிகரிப்புக்கு வழிவகுத்ததுடன் 2016 இல் 2,400 க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் இலங்கையர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டன.

வெளிநாட்டுத் தொடர்புகள் பிரிவு II

தாங்களாகவே தொழில் வாய்ப்பைப் (தனியார்க்கு ஊடாக) பெற்றுக்கொண்ட புலம்பெயர் தொழிலாளர்களின் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கும் உள்நாட்டு முகவர்களால் கவனிக்க முடியாத முறைப்பாடுகளுடன் கையாள்வதற்கும் வெளிநாட்டுத் தொடர்புகள் II பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

பிரதான பொறுப்புக்கள்

- ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்பும் இலங்கைக்குத் திரும்ப அனுசரணையாளர்களால் அனுமதிக்கப்படாத புலம்பெயர் தொழிலாளர்களின் குறைப்பாடுகளைத் தீர்த்தல்.
- தங்களின் சட்டரீதியான தொழிற்துறையிடங்களிலிருந்து அல்லது அனுசரனையாளரிடமிருந்து தலைமறைவான புலன்பெயர் தொழிலாளர்களின் முறைப்பாடுகளைத் தீர்த்தல்.
- காணாமல்போன புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பாக முறைப்பாடுகளைத் தீர்த்தல்.
- வெளிநாட்டு தூதரகங்களின் பாதுகாப்பான இல்லங்களில் உறைவிடம் வழங்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களின் முறைப்பாட்டைத் தீர்த்தல்.
- ஒப்பந்தக் காலத்தில் காயமடைந்து அனுசரணையாளர்களால் அல்லது தொழில் வழங்குனரால் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தொந்தரவு செய்யப்பட்ட முறைப்பாடுகளைத் தீர்த்தல்.
- தாய் நாட்டுக்கு அனுப்புமாறு வேண்டுகோள் செய்யும் புலம்பெயர் தெழிலாளர்களின் NOKk ஆல் செய்யப்படும் முறைப்பாடுகளைத் தீர்த்தல்.
- வெளிநாட்டில் தொழில் புரியும் காலத்தில் ஊதியம் பெறப்படாத மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கப்பட்டு திரும்பி வருபவர்களின் பிரச்சினைகளின் முறைப்பாடுகளைத் தீர்த்தல்.

2016 இல் வெளிநாட்டு தொடர்புகள் II இன் பெற்றுக்கொள்ளப்பட்டதும் தீர்க்கப்பட்டதுமான முறைப்பாடுகள்

	பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள்	தீர்த்து வைக்கப்பட்ட முறைப்பாடுகள்
1வது காலாண்டு	432	307
2வது காலாண்டு	324	455
3வது காலாண்டு	494	448
4வது காலாண்டு	385	347
மொத்தம்	**1,635**	**1,557**

பிரிவுசார் செயற்பாடு

திரும்பிய பின்பு

ஆட்கடத்தலுக்கு எதிர் நடவடிக்கை அலகு பிரிவு

இ.வெ.வே.ப. இன் ஆட்கடத்தலுக்கு எதிர் நடவடிக்கையின் நோக்கம் இலங்கையிலிருந்து "ஆட்கடத்தலை" முற்றாக அழிப்பதாகும். "ஆட்கடத்தலை" விசாரிக்கவும் சட்டத்தை மீறி முறைகேடான செயல்களைச் செய்பவர்களுக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்காடவும் இ.வெ.வே.ப. க்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே இந்த அலகு அத்தகைய தகவல் அல்லது முறைப்பாடுகளை குற்ற புலனாய்வு திணைக்களம், சட்டமா அதிபரின் திணைக்களம் மற்றும் இ.வெ.வே.ப. இன் விசாரணைப் பிரிவுக்கு அனுப்புகின்றது.

இ.வெ.வே.ப. இன் ஆட்கடத்தலுக்கு எதிர் நடவடிக்கை அலகின் செயற்பாடுகள்

இ.வெ.வே.ப. இன் ஆட்கடத்தலுக்கு எதிர் நடவடிக்கை அலகு பொதுமக்களாலும் வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களாலும் தரப்படுகின்ற தகவலின் அடிப்படையில் சட்டத்தை மீறி முறைகேடான செயலைச் செய்பவர்கள் மற்றும் சந்தேக நபர்களின் தகவல் மற்றும் முறைப்பாடுகளைச் சேகரித்துப் பராமரிக்கின்றது.

- ஆட்கட்த்தல் பாதிப்புள்ளாகுபவர்களை அடையாளங்காணுதல்
- மேலும் விசாரணைக்கு குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பாதிப்படைந்தவரை விடல், பாதிப்புள்ளாகியவர் முறைப்பாடுடன் தொடர விரும்பும் பட்சத்தில்.
- நீதி முறை நடவடிக்கைகள் முடியும்வரை சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்துடனும் மேற்கொண்டு செயற்பாட்டைத் தொடருதல்.
- சந்தேக நபர்களின் மேல் இ.வெ.வே.ப. இன் விசேட புலனாய்வுப் பிரிவு விசாரிப்பதற்காக அறிவுறுத்தல்.
- பொது மக்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் வெளியக பாத்திமையுடையோர்களுக்கு ஆட்கடத்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- ஆட்கடத்தல் பற்றி பயிற்சிப் பட்டறைகளிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் வளவாளராக சேவை செய்தல்.
- தேசிய ஆட்கடத்தலுக்கு எதிரான பணிப் படையைப் பிரதிநிதிப்படுத்தல்.
- ஆட்கடத்தல் பற்றிய அறிக்கைக்கு தகவல் (TIP) வழங்கல்.

இலங்கையர்கள் ஆட்கடத்தலால் பாதிப்படைவதைத் தடுக்கும் வகையில் இந்த அலகு பின்வரும் படிகளை எடுத்துள்ளது.

- நீதிமுறை நடவடிக்கைகள் முடியும் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் செயலாற்றுதல்.
- சந்தேக நபர்கள் பற்றி தகவல் வழங்கப்டுமானால் அவர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைக்காக இ.வெ.வே.ப. இன் சட்ட ஏற்பாடுகளின் கீழ் இ.வெ.வே.ப. இன் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு அறிவுறுத்தப்படும்.
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தலும் இ.வெ.வே.ப. இன் அதிகாரிகள் மற்றும் வெளியக பாத்திமையுடையோருக்கும் வழங்கலை வழங்கல்.
- ஆட்கடத்தலை முறியடிப்பது பற்றி இ.வெ.வே.ப. அறிக்கை தயாரித்தல்.
- விசேடமாகப் சென்றடையும் நாடுகளில் பாதிப்புக்குள்ளாக்கப்படும் பெண்களுக்கு உறைவிடம் வழங்குவதன் மூலம் பாதிப்படைந்தவரைப் பாதுகாத்தல்.

நாடு பூராவும்10 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை 1,593 பங்குபற்றியவர்களுக்கு 2016 இல் ஆட்கடத்தலுக்கு எதிரான அலகு நடத்தியது. சொல்லப்பட்ட அலகு 62 முறைப்பாடுகளை 2016 இல் பெற்றுக்கொண்டது. இந்த எண்ணிக்கையில், 14 முறைப்பாடுகள் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்துக்கு விடப்பட்டதுடன் வழக்குகளுன் தொடர விரும்பாத 08 பாதிப்படைந்தவர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பப்பட்டார்கள்.





பொது மக்களுக்கும் அரசாங்க அலுவலர்கள் மற்றும் வெளியக பாத்திமையுடையோருக்கும் ஆட்கடத்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்



ஐக்கிய அராபிய எமிரேட்ஸ்

2016 ம் ஆண்டு காலத்தில் 40,000 க்கும் மேலான இலங்கையர்கள் ஐக்கிய அராபிய எமிரேட்ஸ் புறப்பட்டனர் என்பதுடன் அவர்கள் அதிகளவில் அபுதாபி, சார்ஜா, அல்-அயின், றசல்-கயிமா மற்றும் டுபாய் பிராந்தியங்களில் தொழில் புரிகின்றனர்.

மீள் ஒன்றிணைத்தல் பிரிவு

புலம்பெயர் தொழிலாளர்களின் மரியாதையானதும் பாதுகாப்பானதுமான திரும்பி வருதலுடன் பாதுகாப்பானதும் பொறுப்பு வாய்ந்த குடும்பத்துடனும் சமூகத்துடனும் வினைத்திறன் வாய்ந்த மீள் இணைத்தலை உறுதிசெய்வது மீள் ஒன்றிணைத்தல் பிரிவின் முதன்மையான நோக்கமாகும்.

இந்தப் பிரிவின் நோக்க எல்லை பின்வரும் இரண்டாந்தர நோக்கங்களையும் அதன் தொழிற்பாடுகளையும் சூழ உள்ளது:

- திரும்பி வருபவர்களின் சமூக ஒன்றிணைவு.
- திரும்பி வருபவர்களின் பொருளாதார ஒன்றிணைவு.
- திரும்பி வருபவர்களினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும் பௌதிக மற்றும் உளவியல் நலம்.
- திரும்பி வரும் புலம்பெயர் தொழிலாளர்களின் திரட்டலும் அதிகாரம் வழங்கலும்.
- திரும்பி வருபவர்களின் வினைத்திறனான முகாமைத்துவமும் மீள் ஒன்றிணைப்பு செய்யொழுங்கும்.

2016 இல். இப்பிரிவு "சுய-தொழில் வாய்ப்புக்கள்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சியை நடத்தியதுடன் அதற்கான நிதி உதவியையும் வழங்கியது.

சமூகவியல் பிரிவு

பாதுகாப்பு, திட்டமிடப்பட்ட மற்றும் சிநேகத்தன்மை வாய்ந்த குடும்ப புலம்பெயர் செய்யொழுங்கை உறுதி செய்வதற்காகப் பாத்திமையுடையோர்கள் மத்தியில் சமூக தொடர்புத் தன்மையை பலப்படுத்துவதும் வெளிநாட்டு வேலைக் கைத்தொழிலில் உள்ள எல்லாப் பாத்திமையுடையோர்களினதும் பௌதீகத் தரத்தை முன்னேற்றுவதும் சமூகவியல் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

2016 இல் புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

திகதி	மாவட்டம்	இடம்	பங்குபற்றியோர்
12.02.2016	புத்தளம்	நவகத்தகம	29
29.02.2016	புத்தளம்	பனான்கொட சந்தை	24

புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்யவதுடன் STD மற்றும் HIV / AIDS தடுத்தலுக்குமான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது

திகதி	மாவட்டம்	இடம்	பங்குபற்றியோர்
26.05.2016	பதுளை	பதுளை	50
27.06.2016	பொலநறுவ	பொலநறுவ	42
25.07.2016 26.07.2016	அநுராதபுர	அநுராதபுர	110
15.08.2016	மொனராகல	மொனராகல	61
19.08.2016	கண்டி	கண்டி	66
22.08.2016	மாத்தளை	மாத்தளை	21
23.08.2016	நுவரெலியா	நுவரெலியா	11
10.10.2016	குருநாகல	குருநாகல	124
11.10.2016	குருநாகல	குருநாகல	113
07.11.2016	மாத்தறை	"சனச" கேட்போர் கூடம்	123
08.11.2016	காலி	காலி	167

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சைச் சேர்ந்த அபிவிருத்தி அலுவலகர்களுக்கு நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் முன்னேற்றக் கூட்டங்களும்

திகதி	மாவட்டம்	இடம்	பங்குபற்றியோர்
08.02.2016	அம்பாறை	அம்பாறை	54
19.02.2016	அம்பாந்தோட்ட	தங்காலை	31
04.03.2016	இரத்தினபுரி	இரத்தினபுரி	45
14.03.2016	மொனராகல	மொனராகல	23
09.05.2016	திருகோணமலை	திருகோணமலை	24
10.05.2016	மட்டக்களப்பு	மட்டக்களப்பு	40
16.05.2016	மாத்தறை	மாத்தறை	44
17.05.2016	காலி	காலி	51
27.06.2016	வவுனியா	வவுனியா	16
27.06.2016	பொலநறுவ	பொலநறுவ	19
28.06.2016	புத்தளம்	சிலாபம்	39
05.07.2016 08.07.2016	இரத்தினபுரி	இரத்தினபுரி	39
25.07.2016 26.07.2016	அநுராதபுரம்	அநுராதபுரம்	59
07.08.2016 08.08.2016	பதுளை	பதுளை	87
15.08.2016	மொனராகல	மொனராகல	28
19.08.2016	கண்டி	கண்டி	44
22.08.2016	மாத்தளை	மாத்தளை	21
23.08.2016	நுவரெலிய	நுவரெலிய	11
10.10.2016	குருநாகல	குருநாகல	24
11.10.2016	குருநாகல	குருநாகல	21
18.10.2016	கொழும்பு	கேட்பொர்கூடம் - இ.வெ.வே.ப.	107
07.11.2016	மாத்தறை	சனச கேட்போர்கூடம்	44
08.11.2016	காலி	காலி	21

புலம்பெயர் தொழிலாளரின் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வியை தரமுயர்த்துவதற்கு நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

திகதி	மாவட்டம்	இடம்	பங்குபற்றியோர்
11.10.2016	குருநாகல	குருநாகல	113
07.11.2016	மாத்தறை	சனச கேட்போர்கூடம்	123
08.11.2016	காலி	காலி	167
17.11.2016	கொழும்பு	இரத்மலான பிரதேச செயலகம்	20
29.12.2016	மாத்தறை	திஹகொட பிரதேச செயலகம்	148

திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் சுயதொழில் வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்வதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

திகதி	மாவட்டம்	இடம்	பங்குபற்றியோர்
13.06.2016	அம்பாந்தோட்டை	தங்கால	42
27.06.2016	பொலநறுவ	பொலநறுவ	42
05.07.2016 08.07.2016	இரத்தினபுரி	இரத்தினபுரி	23
25.07.2016 26.07.2016	அநுராதபுரம்	அநுராதபுரம்	110
07.08.2016 08.08.2016	பதுளை	பதுளை	87
15.08.2016	மொனராகல	மொனரானல	61
19.08.2016	கண்டி	கண்டி	66
22.08.2016	மாத்தளை	மாத்தளை	21
23.08.2016	நுவரெலியா	நுவரெலியா	11
10.10.2016	குருநாகல	குருநாகல	124
11.10.2016	குருநாகல	குருநாகல	113
18.10.2016	கொழும்பு	கேட்போர்கூடம் - இ.வெ.வே.ப.	107
07.11.2016	மாத்தறை	சனச கேட்போர்கூடம்	123
08.11.2016	காலி	காலி	167

ஆட்கடத்தலைத் தடுப்பது பற்றி திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திகதி	மாவட்டம்	இடம்	பங்குபற்றியோர்
10.10.2016	குருநாகல	குருநாகல	124
11.10.2016	குருநாகல	குருநாகல	113
18.10.2016	கொழும்பு	கேட்போர்கூடம் - இ.வெ.வே.ப.	107
07.11.2016	மாத்தறை	சனச கேட்போர்கூடம்	123
08.11.2016	காலி	காலி	167

நலன்புரி பிரிவு

புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக வினைத்திறன், தரம் மற்றும் விளைதிறனான சேவைகளைச் செய்வது நலன்புரிப் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

இப்பிரிவு மேற்கூறப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பின்வரும் சேவைகளை வழங்குகின்றது:

- புலம்பெயா தொழிலாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களின் வட்டிக்கு மானிய உதவி வழங்கல்
- புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நிதி / நிதிசார்பற்ற உதவி வழங்குவதுடன் வைத்தியச் செலவுகளுக்கு பணம் செலுத்தல்.
- ஊனமுற்ற புலம்பெயர் தொழிலாளர்களுக்காக வீடுகளை கட்டுதல்.
- உள்நாட்டில் காப்புறுதி நன்மைகளை வழங்கல்.
- புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு வைத்திய வசதிகளைச் செய்வதற்காக வைத்தியப் பாசறைகளை நடத்துதல்.
- விசேட தேவைகளின்மேல் உதவி வழங்கல்.
- ஒரு நலன்புரி படியாக உதவிகேட்டு இ.வெ.வே.ப. க்கு வரும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு இலவச உணவு வழங்குவதுடன் பிரயாணச்செலவைத் தாங்கிக்கொள்ளல்.
- புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கல்.
- புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கும் நலனுக்கும் நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணம் வழங்கல்.
- புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அவசர அல்லது இயற்கை இடர் ஏற்படும் சூழ்நிலைகளில் விசேட உதவி வழங்கல்.
- “Shramika Surakuma” நடமாடும் சேவையினூடாக உதவி வழங்கல்.



இரத்தினபுரி மாவட்டத்தில் புலம்பெயர் தொழிலாளரின் குடும்ப அங்கத்தவர்களுக்கான வைத்தியப பாசறை



மாற்றுத் திறனாளியான ஒரு புலம்பெயர் தொழிலாளிக்கு ஒரு ICU படுக்கை வழங்கல்



பாதுக்கையில் மாற்றுத் திறனாளியான புலம்பெயர் தொழிலாளிக்கு வீடு கட்டுவதற்காக அடிக்கல் நாட்டுதல்



புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மாதாந்த அடிப்படையில் கூப்பன்கள் அன்பளித்தல்





அலரிமாளிகையில் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் நிகழ்ச்சி

பின்விடப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களின் பாதுகாப்புக்கும் நலனுக்கும் நடத்தப்பட்ட செயற்பாடுகள்

விபரம்	2011		2012		2013		2014		2015		2016	
	தொகை	தொகை LKR Mn	தொகை	தொகை LKR Mn	தொகை	தொகை LKR Mn	தொகை	தொகை LKR Mn	தொகை	தொகை LKR Mn	தொகை	தொகை LKR Mn
புலம்பெயர் தொழிலாளர்களுக்கான காப்புறுதித் திட்டம்	2,109	192.1	2,308	115.22	2,784	299.208	2,730	161.935	2,629	150.03	207,903	136.59
தொழிலாளர்கள் நலன்புரி நிதியம் (WWF)	71	2.093	104	7.59	117	9.386	69	3.846	44	4.077	152	25.09
புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கல்	1,821	34.095	2,715	52.42	2,296	4.404	2,147	4.053	3,311	6.028	3,942	71.77
வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வைத்திய உபகரணம் இ போஷாக்குஇ உணவு மற்றும் மருந்து வழங்கல்	7	0.11	10	0.13	125	0.02	-	-	2	0.013	6	0.319
“Sahana” வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளாயிருக்கும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டி அன்பளித்தல்	6	1.647	7	2.1	6	03	03	01.5	-	-	1	0.188
புலம்பெயர் தொழிலாளர்களுக்கு புறப்படு முன்னரான கடன்	46	2.262	26	1.275	28	1.382	28	01.4	7	0.33	48	0.406
புலம்பெயர் தொழிலாளர்களுக்கு குறைந்த வட்டியிலான வீடமைப்புக் கடன்	28	7.52	25	8.22	24	7.3	14	04.45	1	0.3	157	0.367
புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணம் விநியோகித்தல்	-	-	1,339	2011 இருப்பிலிருந்து வழங்கப்பட்டது	476	0.33	267	0.191	05	0.025	122	0.616
புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களின் நன்மைக்காக வைத்தியப் பாசறை நடத்துதல்	-	-	-	-	1,911	1.510	1	0.499	-	-	-	-

பிரிவு சார்ந்த செயற்பாடு

உதவிச் சேவைகள்

நிருவாகம் மற்றும் மனித வளங்கள் பிரிவு

வினைத்திறனான மனிதவளங்கள் முகாமைத்துவம் மற்றும் பொருத்தமான நிருவாகத்தினூடாக பாத்திமையுடையோர்களுக்கு உயர்-தர சேவை வழங்குவதற்கு வசதி செய்வதற்காக இ.வெ.வே.ப. இன் நிருவாகப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

நிருவாகம் மற்றும் மனித வள செயற்பாட்டின் சுருக்கம்
2011 - 2016

விபரங்களவு	2011	2012	2013	2014	2015	2016
31 மார்கழியில் மொத்த பணியணியினர்	831	930	1,088	1,117	1,184	1,177
ஆட்சேர்ப்பு	58	136	188	55	131	25
பதவி உயர்வுகள்	05	220		102	112	08
பணியணியனர் விலகல் (இராஜினமா, VOP, ஓய்வு, முடிவுறுத்தல், நீக்கல்)	42	33	30	24	59	30
ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புகள்	855	541	743	674	712	927
வழங்கப்பட்ட பயிற்சியின் நிதிப் பெறுமதி (LKR Mn.)	4.866	4.412	4.559	5.052	4.626	4.886

பணியணியினர் கடன்	2011	2012	2013	2014	2015	2016
னுளைவசநளள டுழயளெ						
வழங்கப்பட்ட கடன்கள்	334	336	359	393	428	425
செலவு (LKR Mn.)	42.52	47.252	46.989	69.814	106.38	92.688
வாகனக கடன்						
வழங்கப்பட்ட கடன்கள்	58	46	95	63	59	54
செலவு (LKR Mn.)	21.123	19	46.541	30.804	31.455	29.83
வீடமைப்புக்கடன் வட்டியின் 2/3 மீள் நிரப்பல்						
வட்டி மீள் நிரப்பியது	1,055	1,023	880	704	646	704
செலவு (LKR Mn.)	5.386	6.572	7.138	7.113	7.958	13.66
உடன் கடன்கள்						
வழங்கப்பட்ட கடன்கள்	80	56	69	94	75	93
செலவு (LKR Mn.)	1.483	1.42	1.84	2.995	3.028	3.856
விழா முற்பணம்						
அனுமதிக்கப்பட்ட கடன்கள்	593	626	748	758	787	814
செலவு (LKR Mn.)	2.965	3.13	3.74	3.79	7.87	8.14
வைத்திய லெவு மீள் நிரப்பல்						
கோரல்களின் மொத்த எண்ணிக்கை	3,330	3,913	5,111	5,609	6,477	5,864
மொத்தச் செலவு (LKR Mn.)	11.295	17.511	21.828	27.46	36.571	33.795
மூசென்றடையும் இடங்கள் 5 ற்கு பணியணியினருக்குப் போக்குவரத்து வசதி வழங்கப்படுகின்றது (மத்துகம, நித்தம்புவ, இரத்தினபுரி, ஹொறண மற்றும் மருதானை).						
பணியினரின் போக்குவரத்து (LKR Mn.)	11.27	12.58	11.042	11.664	12.81	14.912

நிதிப் பிரிவு

2016 இன் வரவுசெலவுத் திட்டத்தின்படி, இ.வெ.வே.ப. இன் குறிப்பிட்ட பதிவுக் கட்டணம் LKR 5,200 இலிருந்து LKR 15,200 வரை அதிகரித்துள்ளதுடன் அது இ.வெ.வே.ப. இன் வருமானத்தை 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 இல் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளது.

மேலும் மதிநுட்பமான நிதி முகாமைத்துத்தின் காரணமாக 2016 இல் வரிக்கு முன்னரான இலாபம் மிகவும் உயர்வாக வந்ததெனவும் இ.வெ.வே.ப. அறிவித்துள்ளது.

	LKR Mn.		
	2016	2015 (மீளக் கூறப்பட்டது)	Change (%)
குழு			
வருமானம்	4,032	3,479	16%
வரிக்கு முன்னரான இலாபம்	1,315	880	49%
வரிக்குப் பின்னரான இலாபம்	944	884	7%
நடைமுறையற்ற சொத்துக்கள்	7,689	7,441	3%
நடைமுறைச் சொத்துக்கள்	6,618	5,788	14%
நடைமுறைப் பொறுப்புக்கள்	1,531	1,384	11%
SLBFE			
வருமானம்	3,974	3,433	16%
வரிக்கு முன்னரான இலாபம்	1,309	877	49%
வரிக்குப் பின்னரான இலாபம்	942	883	7%
நடைமுறையற்ற சொத்துக்கள்	7,619	7,279	5%
நடைமுறைச் சொத்துக்கள்	6,468	5,769	12%
நடைமுறைப் பொறுப்புக்கள்	1,449	1,337	08%
SLFEA			
வருமானம்	57	46	24%
வரிக்கு முன்னரான இலாபம்	5.2	2.7	93%
வரிக்குப் பின்னரான இலாபம்	2	0.89	125%
நடைமுறையற்ற சொத்துக்கள்	79	167	-53%
நடைமுறைச் சொத்துக்கள்	155	29	434%
நடைமுறைப் பொறுப்புக்கள்	88	47.62	85%

நீண்ட கால முதலீடுகளில் மற்றும் ஹாலி எல மற்றும் இரத்தினபுரி புதிய புலம்பெயர் வள நிலையங்கள் முதலீட்டில் மிகை வருமானம் காரணமாக, ஆண்டு 2015 உடன் ஒப்பிடுகையில் ஆண்டு 2016 இல் மொத்த சொத்துக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இ.வெ.வே.ப. மற்றும் இ.வெ.மு.நி. க்கான மேலும் புரிந்துகொள்ளலுக்காக குழுவின் பிரதான நிதி காரணிகள் கீழே தரப்படுகின்றன.

குழு

LKR MN.

விபரம்	2012	2013	2014	2015	2016
வருமானம்	2,499	2,939	3,537	3,479	4,032
வரிக்கு முன் இலாபம்	258	326	459	880	1,315
வரிக்கு பின் இலாபம்	170	234	336	884	944
நடைமுறையற்ற சொத்துக்கள்	5,180	2,435	5,560	7,441	7,689
நடைமுறைச் சொத்துக்கள்	4,916	8,761	6,682	5,788	6,618
நடைமுறைப் பொறுப்புக்கள்	3,809	4,309	4,714	1,384	1,531

இ.வே.வே.பு.

LKR MN.


விபரம்	2012	2013	2014	2015	2016
வருமானம்	2,470	2,871	3,461	3,433	3,974
வரிக்கு முன் இலாபம்	253	309	416	877	1,309
வரிக்கு பின் இலாபம்	165	222	299	883	942
நடைமுறையற்ற சொத்துக்கள்	5,006	2,238	5,356	7,279	7,619
நடைமுறைச் சொத்துக்கள்	4,900	8,736	6,645	5,769	6,468
நடைமுறைப் பொறுப்புக்கள்	3,696	4,196	4,613	1,337	1,449

இ.வே.மு.நி.

LKR MN.


விபரம்	2012	2013	2014	2015	2016
வருமானம்	29	68	76	46	57
வரிக்கு முன் இலாபம்	5	17	43	2.7	5.2
வரிக்கு பின் இலாபம்	5	12	37	0.89	2
நடைமுறையற்ற சொத்துக்கள்	174	197	204	167	79
நடைமுறைச் சொத்துக்கள்	16	25	37	29	155
நடைமுறைப் பொறுப்புக்கள்	113	113	101	47.62	88

வருமானம்



பணியகத்தின் பிரதான இயக்கும் வருமானம் பதிவுக் கட்டணம், அனுமதிக் கட்டணம், கொரிய ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிக் கட்டணங்கள், வருமானம் மற்றும் முதலீட்டு வருமானம் என்பவற்றைக் கொண்டிருக்கின்றது.

வரிக்கு முன் இலாபம்



வருடாந்தம் 28% வருமான வரி ஏற்பாட்டைப் பணியகம் ஏற்படுத்துகின்றது. ஆண்டு 2015 மற்றும் 2016 இல் வரிக்கு முன்பான இலாபம் குறிப்பிடத்தக்கவாறு அதிகரித்தது.

பராமரிப்புப் பிரிவு

பணியணியினருக்கும் பாத்திமையுடையோருக்கும் வினைத் திறனானதும் விளைவுதிறானானதுமான சேவையைச் செய்வதற்கு ஏற்ற தொழிற் சூழ்நிலையை உருவாக்குவது பராமரிப்புப் பிரிவின் பிரதான குறிக்கோளாகும்.

2016 இல் பின்வரும் செயற்பாடுகளை இப்பிரிவு செய்தது;

- மத்துகம புலம்பெயர்ந்தோர் வள நிலையத்தில் ஒரு தற்காலிகக் களஞ்சியத்தை நிர்மாணித்தல்.
- தலைமையகத்தில் நிறப்பூச்சுத் தீட்டல்.
- தலைமையகத்தில் இரண்டு குளிர்தரும் கோபுரங்கள் பொருத்தல்.
- சீதுவ பயிற்சி நியைத்தில் வெவ்வேறு கூறாகப் பிரித்தல் வேலை பூர்த்தி.
- தலைமையகத்தில் கேட்போர் கூடத்திலுள் கதிரைகள் பழுதுபார்த்தல்.
- பண்டாரநாக்கா சர்வதேச விமான நிலையத்தில் கருமபீடங்களின் இணைப்பு நிர்மாண வேலை.
- கதிர்காமத்தில் முன்மொழியப்பட்ட சுற்றுலா விடுதிக்கான அடிக்கல் நாட்டுதல்.





தகவல் தொழில்நுட்பவியல் பிரிவு

இ.வெ.வே.ப. இன் தொழில் நுட்பவியல் பிரிவு உற்பத்தித்திறனை உச்சப்படுத்தும் வேளையில் வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக பின்வரும் அலகுகளைக் கொண்டிருக்கின்றது.

நிகழ்ச்சி அபிவிருத்தி அலகு

SLBFE இன் வியாபார செய்யொழுங்கு தேவைகளுக்கேற்ப இந்த அலகு கணினி நிகழ்ச்சிகளைத் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்புக்குப்பொறுப்பாக உள்ளது. இந்த அலகில் அபிவிருத்தி செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் தலைமையகம், உள்நாட்டுக் கிளைகளின் நாடு புராவும் உள்ள வலையமைப்பு மற்றும் வெளிநாட்டு தூதரகங்களில் உள்ள 16 வெளிநாட்டுக் கிளைகளுக்கு இந்த அலகு சேவை செய்கின்றது.

வன்பொருள் அலகு

கணினி, கணினி துணை உறுப்புகள் மற்றும் வலையமைப்பு உபகரணம் தொடர்பாக பராமரிப்பு வேலையை இந்த வன்பொருள் அலகு மேற்கொள்ளும் வேளையில் இ.வெ.வே.ப. வலையமைப்பின் சரியான தொழிற்பாட்டுத் தன்மைக்குப் பொறுப்பாக உள்ளதுடன் தேவைப்படும்போது தவறுகண்டு திருத்தலையும் மேற்கொள்கின்றது.

தகவல் தொழில்நுட்பத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

தலைமையகத்தில் உள்ள பிரதான சேவையகத்துக்கு எல்லாப் பயிறிசி நிலையங்களும் பிராந்திய அலுவலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு IP/VPN இணைப்பினூடாக அமுல்செய்யப்பட்ட தொடரறா முறைமை எல்லா பயிற்சி நிலையங்களையும் பிராந்திய நிலையங்களையும் இணைத்துள்ளது. தொடரறா வலை அடிப்படையிலான முறைமைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர்களை அணுகுவதற்கு ஏதுவாக தொடரறா வலை அடிப்படையிலான முறைமையை அமுல்செய்வதனால் இணையம் மூலமான பிரதான சேவையகத்துக்கு தூதரகங்களின் தொழிற் பிரிவுகள் இணைக்கப்படுகின்றன.

2016 இல் செயற்பாடும் பிரதான நடவடிக்கைகளும்

- முறைமைச் செயற்பாட்டை முன்னேற்றுவதற்கு எல்லாப் பிராந்திய மற்றும் பயிறசி நிலையங்களின் இருக்கின்ற IP / VPN இணைப்பு ஆற்றல்திறனை தரமுயர்த்தியது.
- இருக்கின்ற நிகழ் நேர வலையமைப்பு, செயற்பாடு மற்றும் பயன்படுத்தலை கண்காணிப்பதற்கு கட்புல கூர்நோக்கை தீர்வை அமுல்படுத்தியது.
- புதிய உயர்-முடிவு சேவையகங்களுக்குத் தரமுயர்த்தியது.
- சர்வதேச நியமங்களுக்கு (ISCO 8.0) ஏற்றவாறு இருக்கின்ற கட்டுமானப் பிரிவுத் தொழிலை வகைப்படுத்தியது.
- முறைமையினுள் விபரங்களையும் பிம்பங்களையும் பெற்றுக்கொள்வதற்கு கடவுட்சீட்டில் நிழற்படம் உள்ள பக்கத்தை வருடுவதற்கு அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு மென்பொருளாக ஒரு புதிய கடவுட்சீட்டு வருடல் முறைமையை அறிமுகப்படுத்தியது.

2016 இல் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய கணினி நிகழ்ச்சிகள்

நடவடிக்கைத் திட்டக் கண்காணிப்பு முறைமை

நடவடிக்கைத் திட்ட மென்முறை ஆண்டுக்கான ஒரு நடவடிக்கைத் திட்டத்தை வழங்குகின்றது, தட வரிசைகள் பூர்த்தி, நினைவூட்டிகளை முகாமைசெய்தல், தொடர் நடவடிக்கை எடுத்தல், தடவரிசை வேலை முன்னேற்றுதல் மற்றும் செயற்பாட்டின் மேல் பகுப்பாய்வு அறிக்கைகளை உருவாக்குவது. இந்த முறைமை முன்னைய ஆண்டுகளில் எல்லாப் பிரிவுகளாலும் செய்யப்பட்ட கைமுறை வேலையைத் தன்னியக்கமாக்கலையும் செய்கின்றது.

வெளிநாட்டு காப்புறுதி முகாமைத்துவ வலைச் சேவை

யூனியன் காப்புறுதிக் கம்பனி (UIC) முறைமையை வெளிநாட்டு முகாமைத்துவ வலைச் சேவை (OIMWS) ஒன்றிணைக்கின்றது, நிகழ்நேரத்தில் தரவு தளத்தினுள் தன்னியக்கமாக தரவை ஊட்டுகின்றது, தாமதங்கள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துகின்றது. முறைமையை அணுகவதன் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களின் காப்புறுதி மற்றும் கோரல்களின் நிலையைத் தேடவும் கண்காணிக்கவும் OIMWS ஆல் முடியும்.

பதிவுகளின்மேல் தரவுப் பதிவை கண்காணித்தல்

தலைமையகம் மற்றும் ஏனைய நிலையங்களால் பதியப்பட்ட பதிவுத் தரவைக் கண்காணிப்பதற்கு இந்த முறைமை உதவுகின்றது. தரவுப் பதிவில் ஏதாவது குறைபாடுகளை கண்டறிவதுடன் காப்புறுதி தவணைத் தரவையும் ஒழுங்குடுத்த உதவுகின்றது.



மாலைதீவுகள்

மாலைதீவுகளில் எந்நேரமும் சுற்றுலாத் துறை உயர்வாக இருந்தமையால், கடந்த சில வருடங்களுள் வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தன என்பதுடன் 10,000 க்கும் மேலான தனிநபர்கள் வேலை அடிப்படையில் மாலைதீவுக்குச் சென்று அயலில் உள்ள தீவுகளுக்கு இலங்கையர்கள் அனுப்பப்படுவதல் ஒரு ஒப்பற்ற முனைப்பை 2016 கண்டுகொண்டது.

உள்ளகக் கணக்காய்வு பிரிவு

நிதி மற்றும் நிதி சார்பற்ற சொத்துக்களை பாதுகாத்து முறைமையை முன்னேற்றவும் கட்டுப்படுத்துவதற்கான நோக்கத்துக்காக முகாமைத்துவத்துக்கு வழிகாட்டல்களையும் தேவையான உதவியையும் வழங்கும் நிறுவனத்தில் ஒரு சுயாதீனப் பிரிவாக உள்ளக கணக்காய்வுப் பிரிவு உள்ளது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அதன் கண்டுபிடித்தவை மற்றும் பரிந்துரைகள் ஊடாக 2016 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூன்று E க்களான; பொருளாதாரம், வினைத்திறன் மற்றும் விளைதிறனை (three E's ; Economy, Efficiency and Effectiveness) உறுதிப்படுத்துவதற்கு ஒரு பாரிய பங்களிப்பை உள்ளகக் கணக்காய்வுப்பிரிவால் ஏற்படுத்த முடிந்தது.


உள்ளகக் கட்டுப்பாட்டுக்கு ஒரு கருவியாகத் தங்களின் பொறுப்புக்களை நிறைவேற்றும் வேளையில் ஒரு தரமான கணக்காய்வை உறுதிப்படுத்துவதற்கு நேர்மை, செயற்திறன் மற்றும் நம்பகத்தன்மை என்ற கோட்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் தங்களின் சோதனைகளை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியணியினர் நிறைவேற்றினர்.

இப்பிரிவு 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடத்தியதுடன் தலைவருக்கு அடையாளங்காணப்பட்ட பரப்புகளில் 88 கணக்காய்வு அறிக்கைகளை அனுப்பியது.

இப்பிரிவின் மீளாய்வு ஆண்டுக்கான செயற்பாடும் கடந்த ஐந்து வருடங்களுக்கானதுடன் கீழே தரப்படுகின்றன:

	2011	2012	2013	2014	2015	2016
நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை	04	03	04	04	03	04
COPE கூட்டங்களுக்கான தயாரிப்பு	01	01	-	02	-	-
உள்நாட்டில் நடத்தப்பட்ட கணக்காய்வுச் சோதனைகளின் எண்ணிக்கை	08	08	11	07	04	10
வெளி நாட்டில் நடத்தப்பட்ட கணக்காய்வுச் சோதனைகளின் எண்ணிக்கை	01	02	01	03	04	03

2011 முதல் 2016 வரை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் நடத்தப்பட்டதும் பூர்த்தி செய்யப்பட்ட விசாரணை எண்ணிக்கையின் வரைபட விளக்கம்



திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

திட்டமிடல் பிரிவின் நாலு பிரதான தொழிற்பாடுகள்

ஒழுங்கமைப்புத் திட்டங்களின் தயாரிப்பு

நிறுவகத் திட்டம் மற்றும் வருடாந்தத் திட்டம் உள்ளடக்கும் இ.வெ.வே.ப. இன் நிறுவனத்தின் ஒழுங்கமைப்புத் திட்டங்களுக்கு இப்பிரிவு தேசிய தொழில் புலம்பெயர் கொள்கை மற்றும் ஏனைய கொள்கைத் தீர்மானங்களைப் பின்பற்றி அதன் குறியிலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் தந்திரோபாயங்களை உள்ளடக்கப்பட்ட பல கட்டமைப்பு மாற்றங்களுடன் 2016 முதல் 2020 வரை 05 வருடங்களுக்காகத் தற்போதுள்ள இ.வெ.வே.ப. நிறுவகத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எல்லா இ.வெ.வே.ப. பிரிவுகளும் சேர்ந்து பின்பற்றி சம்பந்தப்பட்ட செயற்பாடுகளால் அமுல்படுத்தவும் வேண்டியுள்ள நிறுவகத் திட்டத்தைப் பின்பற்றும் திட்டமிடல் பிரிவினால் ஒவ்வொரு வருடமும் வருடாந்த நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது. எனினும், நடு-ஆண்டளவில் திட்டமிடல் பிரிவு கொள்கை மாற்றங்களுக்கு ஏற்றவாறு திட்டமிடல் பிரிவு வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துக்குத் திருத்தம் செய்கின்றது.

ஒழுங்கமைப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்

பிரிவுத் தலைவர்களுடன் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் பங்குபற்றலுடன் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துக்கு காலாண்டு ரீதியில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை இப்பிரிவு நடத்துகின்றது. மேலும் காலாண்டு அடிப்படையில் வெளிநாட்ட வேலை வாய்ப்பு அமைச்சு, பொது முயற்சித்தாபனங்கள் மற்றும் அரசாங்கக் கணக்காய்வுக்கு வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் அறிவிக்கப்படுகின்றது.

காலாண்டு அடிப்டையிலான செயற்பாட்டு அறிக்கைகளின் தயாரிப்பு

இப்பிரிவினால் தயாரிக்கப்படுகின்ற மும்மொழியிலும் காலாண்டு அடிப்படையிலான செயற்பாட்டு அறிக்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுக்கு அனுப்பப்படுகின்றதுடன் இது இ.வெ.வே.ப. இன் ஒவ்வொரு பிரிவினாலும் நடத்தப்பட்ட ஒவ்வொரு வைபவத்தினதும் நிழற்படங்கள் உள்ளடக்குகின்றது.

உள்ளக நோக்கங்களுக்காகவும் அரசாங்க அதிகாரிகளுக்கு அவர்களின் வேண்டுகோளின்பேரிலும் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன

வெளிநாட்டு வேலையின் பல்வேறு தன்மைகள் பற்றி இ.வெ.வே.ப. க்காகவும் பின்வரும் அடிப்படையில் ஏனைய அரசாங்க அதிகாரிகள் உட்பட வெளியகப் பகுதியினருக்குமாக இந்தப் பிரிவு தேவையான அறிக்கைகளை வழங்குகின்றது;

- மத்திய வங்கிக்கு அனுப்பப்படவேண்டிய இ.வெ.வே.ப. பிரதான கொள்கைகள் பற்றிய அரை வருடத்துக்கான அறிக்கை.
- ஒழுங்கமைப்பு விளைவுகள் கட்டமைப்புக்கு (ORF) எதிராக இ.வெ.வே.ப. இன் முன்னேற்றம் பற்றிய செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்துக்கு (DPMM) அனுப்பப்படவேண்டிய காலாண்டு அறிக்கைகள்
- 05 நவம்பர் 2015 இல் கௌரவ பிரதம மந்திரி அவர்களால் வழங்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை அமுலாக்கல் கண்காணிப்பு பற்றிய அறிக்கை
- ஏனைய அமைச்சுக்களால் வேண்டுகோள் செய்யப்பட்ட பல்வேறு அறிக்கை.
- சபைத் தீர்மானங்களின் அமுலாக்கலின் முன்னேற்றம் பற்றிய அறிக்கைகள்.

தரம் உறுதிப்படுத்தல் அலகு

எல்லா வேலைச் செய்யொழுங்குகளையும் கண்காணிக்கும் வேளையில் வாடிக்கையாளர் திருப்தி மிகையாகுவதற்கு ஏதுவாக தொடர்வான சூழ்நிலையில் வாடிக்கையாளருக்கு வினைத்திறனானதும் விளைவுதிறனானதுமான சேவையை வழங்குவதில் இ.வெ.வே.ப. அர்ப்பணிக்கின்றது.

2016 இல் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

நடவடிக்கை	2013	2014	2015	2016
இ.வெ.வே.ப. பணியணியனருக்கு நடத்தப்பட்ட ISO விழிப்புணர்வு நிகழ்ச்சி எண்ணிக்கை	16	12	12	05
பங்குபற்றியோர் எண்ணிக்கை	600	250	250	250
கிளை அலுவகங்களில் உள்ளகக் கணக்காய்வு எண்ணிக்கை	26	26	23	23
துலைமை அலவகத்தில் உள்ளகக் கணக்காய்வு எண்ணிக்கை	02	01	01	01
SLSI (கண்காணிப்பு கணக்காய்வு) மூன்றாம் கட்சியினர் நடத்திய கணக்காய்வு	01	01	-	-
SLSI ஆல் நடத்தப்பட்ட மீள் சான்றிதழ் கணக்காய்வு	0	-	01	-
முகாமைத்துவ மீளாய்வு கூட்டங்களின் எண்ணிக்கை	02	02	02	02

பெறுகை பிரிவு

பணத்துக்கான பெறுமதியைக் கூட்டுவதுடன் வெளிப்பாட்டுத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையுடன் எல்லா வகை கொள்வனவையும் நிறைவேற்றுவதற்காக இ.வெ.வே.ப. இன் கொள்வனவுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

இப்பிரிவின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் நடத்தப்பட்டன.

- இ.வெ.வே.ப. ஆல் தேவைப்படும் பொருட்கள், சேவைகள், மற்றும் ஆலோசனை பெற்றுக்கொள்ளல்
- விநியோகஸ்தரின் வருடாந்த பதிவு சரிசீர் செய்தல்
- விநியோகஸ்தருக்கான நிலுவைகள் தீர்த்தல்
- பணியணியினர் சீருடை மற்றும் அவர்களின் தேவைப் பன்பாடுகளின் ஏற்பாடு
- பயிறசி நியைங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கான கட்டிடம் வாடகைக்க அமர்த்தல்
- இ.வெ.வே.ப. க்காகத் தேவையான சொத்துக்களைக் கையேற்றல்

தங்காலை, மத்தகம், இரத்தினபுரி, ஹாலிஎல புலம்பெயா வள நிலையங்களை ஸ்தாபித்தல் இப்போது நடைபெறுகின்றது.

இரத்தினபுரி மற்றும் பதுளையில் முன்மொழியப்பட்ட புலம்பெயர் வள நிலையங்கள்

இ.வெ.வே.ப. இன் செயற்பாடுகளை பன்முகப்படுத்தும் வேளையில் உபசரிக்கும் நாடுகளின் கேள்வியை நிறைவேற்றுவதற்காக வெளிநாட்டுப் பங்காளா அல்லது கம்பனிகளுடன் இணைந்து தொழில் குறிப்பான பயிற்சியை அறிமுகப்படுத்தும் நோக்குடன் புலம்பெயர் வளநிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

2017 பங்குனியில் இரத்தினபுரியில் புலம்பெயர் வள நிலையம் பூர்த்தியாக்கப்பட்டு திறக்கப்படல்



இரத்தினபுரியில் முன்மொழியப்பட்ட புலம்பெயர் வளநிலையம்



பதுளையில் முன்மொழியப்பட்ட புலம்பெயர் வளநிலையம

கதிர்காமத்தில் முன்மொழியப்பட்ட சுற்றுலா விடுதிப் பகுதிகள்

	செயற்திட்ட ஆரம்பம்	செயற்திட்ட பூர்த்தி	மதிப்பீடு செய்யப்பட்ட VAT (LKR)
புலம்பெயர் தொழிலாளருக்கான சுற்றுலா விடுதி	03.05.2016	27.04.2017	38,494,623.13
பணியக ஊழியர்களுக்கான சுற்றுலா விடுதி	04.04.2016	25.04.2017	55,888,487.77
விசேட விருந்தினருக்கான சுற்றுலா விடுதி	18.04.2016	20.01.2017	32,515,493.64



கதிர்காமத்தில் சுற்றுலா விடுதி

விளம்பரம் மற்றும் பொது தொடர்புகள் பிரிவு

அச்சடிக்கப்பட்ட மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் வலுவாய்ப்புள்ள புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு அறிவூட்டும் நோக்கத்துடன் விழிப்புணர்வை உருவாக்கித் தகவலை வழங்குவதுதான் பொது தொடர்புகள் பிரிவின் பிரதான குறிக்கோளாகும். இப்பிரிவு ஊடகங்களுக்கு செய்தி அறிக்கைகளைத் தயாரிக்கின்றது. பத்திரிகை மகாநாடுகள் மற்றும் வைபவங்களை உள்ளடக்குவதுஇ புதினப்பத்திரிகைக்கான கட்டுரைகளை வெளியிடுவதுஇ செய்திகளைப் பதிவதும் செய்திகனைச் சேகரிப்பதும்இ விசேட பைவங்களின் நிழற்படங்களை காட்சிப்படுத்தல்இ பொது மக்களுக்கு சுருக்கமாக எடுத்துரைப்பது, பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவது, நடமாடும் சேவைகளை நடத்துதல், பொது மகாநாடுகள், பொது மக்களுக்கான விழிப்புணர்வுக்கான பொருட்களைத் திட்டமிடல் ஆகியவற்றைத் தயாரிக்கின்றது.

2016 இல் நடத்தப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம்

நடவடிக்கை	எண்ணிக்கை
பத்திரிகை விளம்பரம்	41
தொலைபேசி விளம்பரம்	05
வானொலி விளம்பரம்	05
விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	03
விசேட வைபவங்களை உள்ளடக்குவது	70



இப்பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட பத்திரிகை மகாநாடு



ஓமானுக்கும் குவைற்றுக்குமான பயனத்தின்போது ஊடக அனுசரணை

ஆராய்ச்சிப் பிரிவு

வினைத்திறனான ஆராய்ச்சி மற்றும் பல்வேறு விடயப்பரப்புகளில் கற்கை என்பவற்றினூடாக இ.வெ.வே.ப. இன் குறியிலக்குகளையும் இ.வெ.வே.ப. இன் குறியிலக்குகளையும் குறிக்கோள்களைகளையும் வடிவமைப்பதில் இ.வெ.வே.ப. இன் ஆராய்ச்சிப் பிரிவு ஒரு பிரதான வகிபாகத்தை வகிக்கின்றது..

2016 இல், ஆராய்ச்சிப் பிரிவு பின்வரும் ஆராய்ச்சிகளை நடத்தியது:

திரும்பி வந்த இலங்கை ஊழியர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் நலன் பற்றி ஒரு கற்கை

திரும்பி வந்த புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் நலன் பற்றி ஆராய்வது கற்கையின் பிரதான குறிக்கோளாகும்.இந்த கற்கை மாதிரிக்காக 600 புலம்பெயர் தொழிலாளர்கள் கழுத்துறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டதுடன் வினாக்கொத்துக்கள் மற்றும் கவனமீர்ப்புக் குழு கலந்துரையாடல்கள் மூலம் தரவு சேகரிக்கப்பட்டது.

வீட்டுப்பெண் தொழிலாளர் புலம்பெயர்தலுக்கு வழிவகுத்த நிதியற்ற தேவைகள் பற்றிய கற்கை

வீட்டுப் பெண் தொழிலாளர்கள் புலம்பெயர்தலுக்கான நிதியற்ற தேவைகளின் காரணங்களை அடையாளங்காணுவது இந்த ஆராய்ச்சியின் பிரதான குறிக்கோளாகும். 156 புலம்பெயர் பெண் தொழிலாளர்கள் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் தரவு வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கப்பட்டது.

அனுப்பும் பணத்தைச் சேகரிப்பது மற்றும் பெறுகடன் பற்றி பின்னால் விடுபட்ட குடும்பங்களின் நடத்தை

மிக அண்மையான சூழ்நியைில் செல்லுபடியான கண்டுபிடிப்புக்களைக் பரிசோதிப்பதற்கு 2012 / 2013 வீட்டுடமை வருமானம் மற்றும் செலவு அளவீட்டிலிருந்து பெற்ற மிக அண்மைய தரவை உபயோகித்து பகுப்பாய்வை மீளாய்வு செய்வதன் மூலம் தற்போதுள்ள கற்கைகளை சரிசீர் செய்வதில் கற்கை இலக்காகக் கொண்டுள்ளது.

இதற்கு மேலாக, புள்ளிவிபரத் தரவு மற்றுமட தகவலை வழங்குவதன் மூலம் இப்பிரிவு அக்கறையுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் அறிவைப் பகிர்வதுடன் ஒரு ஆராய்ச்சி நூலகத்தையும் இப்பிரிவு இயக்குகின்றது. 2016 இல் இப்பிரிவு. 04 புத்தகக் கண்காட்சிகளையும் நடத்தியது.





பேருவலையில் நடத்தப்பட்ட ஒரு கவனமீர்ப்பு குழு கலந்துரையாடல்

போக்குவரத்துப் பிரிவு

பின்வரும் துணைச் சேவைகளை வழங்குவது மூலம் SLBFE இன் தூரநோக்கு மற்றும் பணிக்கூற்றை நிறைவேற்றுவதற்கான பங்களிப்பை வழங்குவது போக்குவரத்துப் பிரிவின் பிரதான குறிக்கோளாகும்:

- தொழிற்பாட்டுப் பிரிவுகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் சிரேஸ்ட முகாமைத்துக்கு அவர்களின் தேவைகளையும் வழங்குவதற்குமான ஏற்பாடு.
- 2016 இல் இ.வெ.வே.ப. க்குச் சொந்தமாகவுள்ள 84 வாகனங்களும் வாடகைக்கு எடுக்கபட்ட 20 வாகளங்களும் இ.வெ.வே.ப. இன் போக்குவரத்துத் தேவைகளுக்கு உபயோகிக்கப்பட்டன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } වී/ඉවෛ/ඉ/එස්එල්ඉපීඑප්ආ 01/16/20 මගෙ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2018 ஜனவாரி 28 திகதி

தலைவர்,
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் அதனது நிருவாகிக்கும் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்பு பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை வெளிநாட்டு பணியகத்தின் மற்றும் அதனது நிர்வாக் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் - பணியகம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை வெளிநாட்டு பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியம 19 இன் பிரகாரம் பணிகொடை பொறுப்பு உடைய முதலீடு ஒன்று காணப்படின் குறிப்பிட்ட முதலீடு தொடர்பாக நியாயமான பெறுமதிக்கு சீராக்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு உண்மையான நலன் மற்றும் எதிர்பார்த்த நலன்களிடையே காணப்படும் வித்தியாசம், ஆயுள்கணிப்பு பெறுமதி மதிப்பீட்டின் மீது கணிக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டம் என இனம் காண வேண்டும். எனினும் பணியகத்தினால் பணிக்கொண்டப் பொறுப்புடக்காக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டில்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 151,637,722 இற்கான பெறுமதிகளுக்காக நியாயமான பெறுமதிக்கு சீராக்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அந்த முதலீட்டு பெறுமதி ஆயுள் கணிப்பு பெறுமதி மதிப்பீட்டின் போது கவனத்தில் எடுத்திருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுகளில் 02 கணக்கு விடயங்களில் முறையே ரூபா 2,453,136 இற்கான மற்றும் 21,140,548 இற்காக விளக்கமளிக்கப்படாத மீதிகள் உள்ளடங்கியிருந்த போதிலும் அம் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாடு செல்வோரின் முறைப்பாடுகள் / சச்சரவுகளை இணக்கஞ் செய்வதற்கு முகவர் நிறுவனங்களினால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பணியகத்தில் வைப்புச் செய்திருந்த மீதி ரூபா 10,120,447 தொகையாக இருந்ததுடன் அதனுள் 2005 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ரூபா 6,788,954 இற்கான மீதியை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நட்டஈடுகள் செலுத்துவதற்காக பணிகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 4,781,403 இற்கான தொகையில் 2005 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பான ரூபா 939,510 தொகை பல்வேறு காரணங்களினால் 2016 திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட சாராருக்கு தீர்ப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) வெளிநாட்டு தூதரக நலன்புரி பிரிவில் இருந்து 2006 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக சேகரித்து பணியகத்திற்கு அனுப்புவதற்காக திறைசேரிக்கு அனுப்பியிருந்த தொழிலாளர் ஒப்பந்த உடன்படிக்கைக் கட்டணம் ரூபா 2,622,815,725 இல் ரூபா 953,461,366 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை பணியகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2000 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் 84 வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 658,250 இற்கான செஸ்வரி 2016 திசெம்பர் 31 திகதி வரையும் அறவீடு செய்வதற்கு அல்லது அது தொடர்பாக வேறு பொருத்தமான நடவடிக்கை ஒன்று பணியகத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஆண்டு மற்றும் 2014 ஆண்டு தொடர்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொலைபேசி விலைப்பட்டிகளை தீர்ப்பதற்காக தொடர்பாக வரிசை அமைச்சிலிருந்து பெற வேண்டிய ரூபா 3,213,783 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2008 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை விமான நிலைய அலகுகள் மூலம் பணியக பதிவு செய்தல்களைப் பெற்றுக் கொடுக்கும் போது அறவிடப்பட வேண்டிய மொத்தக் கட்டணத்தை செலுத்தாத வெளிநாடு செல்வோரிடம் பெற வேண்டிய ரூபா 602,759 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு அல்லது அது தொடர்பாக வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பணியகத்திற்கு சொந்தமான சேர்ந்த கட்டிடமொன்றில் நடாத்தப்படும் ஓமான் தூதரகத்திற்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இருந்து 2013 ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 52,270,080 தொகையின் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 37,172,298 தொகைக்கான பலவின கடன் கொடுத்தோர் மீதியில் 2012 ஆண்டு முதல் 2015 வரையான காலப்பகுதிகள் தொடர்பான ரூபா 24,317,124 தொகையான மீதி 2017 ஜூன் 30 திகதி வரை தீர்ப்பதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு பணியகம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2015 ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்த கொரியா விசா வைப்புகள் ரூபா 730,200 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருதுக்கவில்லை.

(ஒ) கொரிய அனுமதிப்பத்திர கட்டணத்திற்கான 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக அறவீடு செய்யப்பட்டிருந்த ரூபா 89,184,454 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரையும் கொரியா

வேலைவாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஓ) ஊழியர் கடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட ஒரு வருட காலத்தை மிகைத்து இடர் மற்றும் வாகனக் கடன் மீதி ரூபா 2,222,165 தொகையாக இருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்க ளுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை	
i. நிதிப்பிரமாணம் 371	துணைக் கட்டு நிதிகளாகப் பெற்றிருந்த முற்பணங்கள் வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு அப்பால் தாமதிக்கக் கூடாது எனினும் அதற்கு முரணாக 2003 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 7,559,410 தொகைக்கான கட்டுநிதிகள் முற்பணத்தை தீர்த்திருக்கவில்லை.
ii. நிதிப்பிரமாணம் 571	திருப்பி செலுத்த வேண்டிய ரூபா 1,875,084 தொகைக்கான கேள்வி வைப்புக்களுள் 05 வருடங்களை மிகைத்த ரூபா 578,680 இற்கான வைப்புக்களை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	iii. நிதிப்பிரமாணம் 757(2)	2014 ஆண்டிற்கான சொத்துக்கள் மெய்மையாதலின் போது இனங் காணப்பட்ட 2106 உபகரண விடயங்கல் காணாமல் போனது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
(ஆ)	1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றரிக்கை	பணியகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.
(இ)	2003 ஜூன் 02 ஆம் திகதி பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிச் சுற்றரிக்கையின் 6.5.1 ஆம் பந்தி	நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட வேண்டிய வரைவு வருடாந்த அறிக்கை 2017 நவம்பர் 24 திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.
(ஈ)	2014 நவம்பர் 22 ஆம் திகதிய PRE/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளர் சுற்றறிக்கையின் 05(i) ஆம் பந்தி	சுற்றறிக்கைக்கு முரணாக பதுளை மற்றும் மொணராகலை மாவட்டங்கள் தேர்தல் காலப்பகுதியில் ரட்டவிரு அமைப்பின் நிகழ்ச்சித் திட்டத்திற்கான பயன்படுத்துவதற்கான வாடகை அடிப்படையில் பெற்றிருந்த வாகனங்களுக்காக 2016 ஆண்டின் போது ரூபா 2,858,641 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் பணியக உத்தியோகத்தர்களுக்கு தின வரவு படி, மாதாந்த இலக்கை நிறைவேற்றல் படி, விமான நிலைய அலகின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள், 24 மணித்தியாளங்கள் பூராகவும் செயற்படும் வெளிநாடு சென்றோர் தொடர்பாக தகவல் ஒலிப்பதிவு கூடத்தில்

கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விஷேட படிகள் செலுத்தல் மற்றும் ஆபத்து படி என ரூபா 64,491,839 இற்கான பலவித படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

3. நிதி செயலாற்றுகை

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது தொகுதியின் மற்றும் பணியகதின் நிதி விளைவுகள் முறையே ரூபா 944,363,600 தொகை மற்றும் ரூபா 942,355,085 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்ரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் முறையே ரூபா 884,713,213 தொகை மற்றும் ரூபா 883,817,095 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் தொகுதியின் மற்றும பணியகத்தின் நிதி விளைவுகள் முறையே ரூபா 59,650,387 இனால் மற்றும் ரூபா 58,537,990 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. செயற்பாட்டு மற்றும் நிதி வருமானம் ரூபா 622,757,544 இனால் அதிகரித்தல் மற்றும் விளம்பர செலவுகளில் மற்றும் நலன்புரி நிதியத்தின் ஏனைய செலவுகள் ரூபா 44,714,891 இனால் குறைவடைதல் மேற்கூறிய வளர்ச்சிக்கு காரணமாகியுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை தேறிய இலாபத்தில் வளர்ச்சி ஒன்று காணப்பட்ட போதிலும் அது 2015 ஆண்டின் போது சிறு அளவில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் 2016 ஆண்டின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 57.5 சதவீதத்திற்கான வளர்ச்சி ஒன்று காணப்பட்டது. மேலும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனங்கள், அரசுக்கு செலுத்திய வரி மற்றும் பெறுமானத் தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 1,252,718,830 இற்கான பணியகத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,640,624,061 தொகை வரை வளர்ச்சியடைந்ததுடன் 2015 ஆண்டிற்கு நேரொப்ப அவை 50 சதவீதத்திற்கான வளர்ச்சி ஒன்றினை அடைந்திருந்தது.

3.2 பணியகத்திற்கு எதிராக அல்லது பணியகத்தினால் ஆரம்பிக்கபட்டுள்ள சட்ட சம்பவங்கள்

வெளி மற்றும் உள் சாராரினால் பணியகத்திற்கு எதிராக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் பணியகத்தினால்

அதற்காக ரூபா 73,766,962 தொகை எதிர்பார்க்கும் பொறுப்புகள் என இனங்காணப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்திற்கு செய்திருந்த முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை கிடைத்திருந்த முறைப்பாடுகளில் 2267 தொகை 2016 ஜனவரி 01 திகதி அளவில் தீர்க்கப்படாமல் இருந்ததுடன் வருட இறுதியளவில் அவற்றில் 244 தொகை மேலும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

(ii) 2016 ஆண்டின் போது கிடைத்திருந்த 5,686 முறைப்படுகளில் 2,320 தொகை எனப்படும் 41 சதவீதம் மாத்திரம் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டின் போது முறைப்பாட்டாளர்கள் தொடர்ந்து செயற்பட தேவையில்லை என அறிவித்தல் மற்றும் முறைப்பாட்டாளர்களிலேயே கோவைகள் மூடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 1,911 ஆகும். அதன் பிரகாரம் தீர்ப்பு ஒன்று இன்றி கோவைகள் மூடப்படல் மற்றும் முறைப்பாட்டாளர்கள் தொடர்ந்து செயற்படத் தேவையில்லை என அறிவித்ததன் காரணமாக மூடி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட 2,274 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவை முறையற்றதென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்து உண்மையாகவே தொடர்ந்தும் சிக்கல் ஒன்று காணப்படுகின்றவா என பரிசோதனை மேற்கொள்ளவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) முறைப்பாடுகளுக்கு வழங்கியிருந்த தீர்ப்பு ஒன்று ஆக "வெளிநாடு சென்றிருந்த ஊழியர்கள் திருப்பி இலங்கைக்கு வரவழைத்தல்" என குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வாறு திருப்பி அழைத்திருந்தத வெளிநாடு சென்றோர் 2016 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த முறைப்பாடுகள் 5,686 இல் 2016 ஊழியர்களை மீண்டும் இலங்கைக்கு தருவிப்பதன் மூலம் மாத்திரம் தீர்ப்பு வழங்கியிருந்தவையாக காணப்பட்டதுடன் இவ்வாறான சிக்கல்கள் மீண்டும் ஏற்படாதிருக்க நிரந்தர தீர்வு வழங்குவதல் தொடர்பாக கவனம் செலுத்தும் நடைமுறையொன்றினை ஏற்படுத்துவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பணியகச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று புதுப்படுத்தும் போது அங்கு 28 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை கடைப்பிடித்துள்ளதாக பணியகம் திருப்தி அடைய வேண்டியதுடன், சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் அந்த ஏற்பாடுகள் ஏதும் மீறப்பட்டிருப்பின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கும் இயலுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள 27 வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிலையங்கள் தொடர்பாக இரண்டு வருடங்களில் கிடைத்திருந்த முறைப்பாடுகள் மற்றும் வெளிநாடு செல்வதன் பரிசோதனை செய்த போது முகவர் நிலையங்களில் முறைப்பாடுகளால் அதிகரிப்பு ஒன்று மற்றும் இரண்டு வருடங்களில் வெளிநாடு சென்றவர்கள் குறைவடைந்ததை விட குறைந்த சதவீதத்தில் முறைப்பாடுகள் கிடைத்தல் குறைவடைந்திருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் வெளிநாடு செல்லல் அதிகரித்திருந்த போதிலும் அதைவிட கூடிய சதவீதத்தில் முறைப்பாடுகள் அதிகரித்திருத்தல் அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக பணியகம் மேற்கூறிய சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது சிக்கல் நிலைமை காணப்பட்டது.

4.2 முகாமைத்துவ தொழற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சமூர்த்தி அதிகார சபை மற்றும் பணியகத்தின் ஒத்துழைப்புடன் வெளிநாடு செல்லும் ஊழியர்களுக்காக செயற்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 10,264 வெளிநாடு சென்றோருக்கு சமூர்த்தி வங்கியின் மூலம் ரூபா 2,998 மில்லியன் கடன் தொகையொன்று வழங்கியிருந்ததுடன் தற்போது

அத்திட்டம் செயலிழந்துள்ளது. அவற்றில் 26 சதவீதம் ஆகிய 2674 வெளிநாடு சென்றவர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 610.14 மில்லியன் (20 சதவீதத்தினனை) கடனை திருப்பி செலுத்துவதை புறக்கணித்திருந்தனர். மேலும் 1,573 வெளிநாடு சென்றோருக்கு கடன் வழங்கும் நிபந்தனைகளுக்கு முரணாக மற்றும் எதுவித பிணையுமின்றி மொத்தத் தொகையில் 12 சதவீதம் எனப்படும் ரூபா 360.27 மில்லியன்களுக்காக கடன்வழங்கியிருந்தது மேலும் பணியகத்தினால் மேற்கூறிய விடயத்திற்காக சமூர்த்தி அதிகார சபையில் வைப்புச் செய்திருந்த ரூபா 100 மில்லியன் வைப்புத் தொகையின் வட்டியும் 2014 ஆண்டு முதல் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அபூதாபி அலுவலகத்தின் 2014 ஜூன் மாதம் ஏற்பட்டிருந்த ரூபா 1,058,276 இற்கான நிதிமோசடி தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு 2014 ஜூன் 17 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டு மூன்று வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அதில் கணிசமான முன்னேற்றமொன்று கணக்காய்வின்போது அவதானிக்கப்படவில்லை. இது தொடர்பாக பணியகத்தினால் முறையான செயற்பாடுகளும் எடுத்திருக்கவில்லை.

(இ) பணியகத்தினால் 101 சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 2,822,750 இற்கான முற்பணத் தொகையில் ரூபா 1,762,741 தொகை அதாவது 50 சதவீத்தை விட கூடிய தொகையொன்று பயன்படுத்தப்படாமல் மீண்டும் பணியகத்திற்கு தீர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முற்பணத் தொகை முறையான முகாமைத்துடன் வழங்கியிருந்தென கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(ஈ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95 மில்லியன் உடைய வ/ப கஹகொல்ல பொறியியல் சேவை கம்பனிக்கு சொந்தமான காணி ஒன்று 99 வருட குத்தகைக்கு பெறுவதற்காக பணியகத்தினால் 2013 ஆண்டின் போது ரூபா 20 மில்லியன் முற்பணமொன்று வ/ப அரச மூலவள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2013 ஜனவரி 17 திகதிய 10/2013 (M-01) இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கட்டிடங்களின் மற்றும் காணியின் சிக்கலற்ற உரிமையைப் பெற்றுக்கொள்ளுமாறு பணியகத்திற்கு அறிவித்திருந்த போதிலும் 2017

அக்டோபர் வரை காணியின் சிக்கலற்ற உரிமையை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(உ) பணியகத்தினால் தங்காலை மற்றும் குருநாகல் காணிகள் அபிவிருத்தி செய்யும் விடயத்திற்காக ரூபா 309,600,107 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2017 அக்தோபர் வரை இக்காணிகளை உரித்தாக்குவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பணியகத்தில் பயிற்சி நிலையம் ஒன்று அமைப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிடிபன மகாசேனவத்த என்ற 05 ஏக்கர் காணி 50 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2010 நவம்பர் 03 திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2010 ஜனவரி 15 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளக பெறுமதி மதிப்பீட்டுக் குழுவினால் ரூபா 52 மில்லினிற்கு பெறுமதி மதிப்பீடு செய்து அப்பணத்தில் 50 சதவீதமாகிய ரூபா 26 மில்லியன் பணியகத்தினால் 2010 பெப்ரவரி 26 திகதி செலுத்தி காணியின் பௌதீக உரிமையை பணியகத்திற்கு உரித்தாக்கியிருந்தது. இந்த காணி தொடர்பாக பிரதான பெறுமதி மதிப்பீட்டாளர் மூலம் பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக்கொள்ளாமல் 50 சதவீதத்திற்காக கொடுப்பணவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 04 திகதி வரையும் அக்காணியின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு மற்றும் குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் குறிக்கோள்களில் இலங்கையர்களுக்கு இலங்கைக்கு வெளியே வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களின் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன அடங்கியிருந்த போதிலும் 2008 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை பணியகத்திற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த தொழில் கட்டளைகள் எண்ணிக்கையில் 50 சதவீதம் வரையேனும் தொழிலாளர்களை அனுப்புவதற்கு பணியகத்திற்கு முடியாதுள்ளது.

(ஆ) 2008 ஆண்டிற்கு நேரொப்ப 2012 ஆண்டின் போது வெளிநாட்டு வேலை கட்டளைகளின் குறைவடைந்தல் 40 சதவீதமாக இருந்ததுடன் 2013 ஆண்டின்போது 21 சதவீத்தினால் அதிகரித்திருத்தது. எனினும் 2014 ஆண்டிலிருந்து 2016 ஆண்டு வரை அது படிப்படியாக போது கீழிறங்கியிருந்ததுடன் அது 2014 ஆண்டிற்கு ஒப்பாக 34 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2008 ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆண்டின் போது தொழில் சந்தை இழப்பு 73 சதவீதமாகும். 2008 ஆண்டின் போது 16 சதவீதமாக காணப்பட்ட தொழிலாளர் வழங்குதல் 2016 ஆண்டளவில் 32 சதவீதம் வரை அதிகரித்தல் ஒன்றினைக் காட்டிய போதிலும், அது பணியகத்திற்கு செயலாற்றுகையின் முன்னேற்றத்தின் காரணமாக ஏற்பட்டதன்றி வெளிநாட்டு வேலை வாய்ப்பு சந்தையில் இலங்கை தொழிலாளர்களுக்கு காணப்பட்ட கேள்வி குறைந்திருந்தல் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் அதிகமாக வெளிநாட்டு தொழில் சந்தைக்கு அனுப்புவதற்காக கிராமிய மட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கு விளிப்புணர்வு ஏற்படுத்துவற்காக இரத்திரபுரி மற்றும் காலி மாவட்டங்களை மத்திய மயப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த முன்னோடிச் செயற்திட்டகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் அம் மாவட்டங்களில் இருந்து கூட்டிணைப்பு உத்தியோகத்தர்கள் முறையே 06 மற்றும் 04 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். 2016 ஆண்டின் போது ரூபா 30,000 இற்கான படி ஒன்று செலுத்துவதற்காக சேர்க்கப்பட்டிருந்த அந்த உத்தியோகத்தர்கள் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,344,000 இற்கான செலவு ஒன்று பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அந்த முன்னேற்றம் செயற்திட்டத்தின் காலம் முடிவடைந்து இருந்த போதிலும் அது தொடர்பான செயற்திட்டத்தின் முன்னோடி தொடர்பாக தொடல் செயல் நடவடிக்கைகள் ஏதும் பணியகத்தினாலி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அமைச்சர் சிங்கப்பூரிலிருந்து பெற்றிருந்த மருத்துவ சிகிச்சைக்காக செலவிடப்பட்ட 989.25 சிங்கப்பூர் டொலர்கள் (அண்மித்த ரூபா 102,993 தொகை) பணியகத்தின் நலன்புரி நிதியத்திலிருந்து மேற்கொள்ள முடியாதெனினும் அப்பணத்தை வேறு ஒரு உத்தியோகத்தரின் பேரில் அமைச்சருக்கா மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது.

4.4 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்திய மூலவளங்கள்

பின்வரும் அவதானிப்புகளை மேற்கொள்ளப்பட்டன.

(அ) அகற்றுவதற்கு ஒதுக்கியிருந்த பணியகத்தின் 27 வாகனங்களின் 2015 ஜூலை 10 திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதி வரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மூடப்பட்டிருந்த பயிற்சி நிலையங்களின் 07 பண்ட விடயங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்பிற்காக வெளியே செல்லும் மற்றும் சேவை செய்த பின்னர் நாட்டுக்கு வரும் இலங்கையர் தொடர்பான தரவு வங்கி ஒன்று நிறுவி பேணப்படுவதற்காக பணியகம் செயற்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2016 ஜனவரி 08 முதல் 14 வரையான காலப்பகுதியில் பதிவுகளை மேற்கொள்வதற்காக செயற்படுத்திய விளம்பர விடயங்களுக்காக பணியகம் ரூபா 8,274,964 தொகை செலவிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அக்காலப் பகுதியில் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 563,768 வெளி-நாடு சென்றிருந்த தொழிலாளர்களில் 25 சதவீதம் ஏனும் மேற்கூறிய தரவு வங்கியில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ஆக்கபூர்வமாக இருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பிரயாணங்கள் தொடர்பாக பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 463,481 தொகை அமைச்சின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி செய்யப்பட்டமையினால் அமைச்சினால் மீளளிப்பு செய்வதை நிராகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பணியக சட்டத்தின் 53(3) பிரிவிற்கு புறம்பாக பணியகத்தினால் பெயர் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் ஊடாக

பதிவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டு உள்ளக சுற்றறிக்கை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பதிவுக் கட்டணமாக பணியகத்தினால் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 70 சதவீதம் அதாவது ரூபா 31,612,000 தொகை மற்றும் ரூபா 91,623,000 தொகை என கூட்டுத்தொகை ரூபா 123,235,000 தொகை அதாவது அவ்வாறு பெயர் குறிப்பிட்ட தனியார் முகவர் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தமையால் பணியகம் அந்த வருமானத்தை இழந்துள்ளது.

(இ) கொரிய தொழில் பெறுவோருக்கு மருந்துவ பரிசோதனை மேற்கொள்வதற்காக தேவைப்படும் நிருவாக சேவைகள் வழங்கும் விடயங்களுக்காக குறிப்பிட்ட மாதத்திற்கான மருத்துவ கட்டண வருமானத்தில் 25 சதவீதம் பணியக நிறுவாக கம்பனிக்கு செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. அதன் பிரகாரம் கம்பனி ரூபா 9,507,988 இற்கான வருமானம் ஒன்றின் உழைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட அனைத்து நிருவாக விடயங்களும் பணியகத்தின் ஆட்சேர்ப்பு பிரிவினை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

4.7 வேறு நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த பணியகத்தின் மூலவளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டின் போது பணியகத்தினால் வரிசை அமைச்சுக்கு 07 உத்தியோகத்தர்களும் நிருவாக கம்பனிக்கு 03 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிந்ததுடன் சம்பளங்கள் படிகளாக ரூபா 5,308,240 தொகை பணியகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அது தவிர சப்பிரகமுவ மாகாண ஆளுனர் அலுவலகத்திற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) பணியகத்தினால் 2016 ஆண்டின் போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சில் விடயங்களுக்காக 04 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 3,292,242 தொகை செலவிடப்பட்டிருந்தது.

4.8 பதவியணியின் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 1248 ஆக இருந்ததுடன் பதவிநிலை, பதவிநிலை அல்லாத மற்றும் ஏனைய தொகுதிகளைச் சேர்ந்த முயையே உத்தியோகத்தர்கள் 81, 38 மற்றும் 11 இற்கு பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் சிற்றூளியர்கள் 46 பேர் மிகையாக காணப்பட்டனர்.

(ஆ) மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்படாத 05 பதவிகளுக்காக உத்தியோத்தர்கள் 44 பேர் ரூபா 17,892,771 இற்கான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் தூதரக சபைக்கான முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இனை புறம்பாக பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றின் பிரகாரம் ஆட்சேர்ப்புகள் நடைபெற்றுள்ளன.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு		அவதானிப்புக்கள்
(அ)	கணக்கீடு	(i)	பணியகத்திற்கு கிடைக்க வேண்டிய மற்றும் பணியகத்தினால் செலுத்தப்பட வேண்டிய மீதிகளை தீர்ப்பதில் தாமதம் காணப்பட்டமை.

		(ii) வெளிநாட்டு தூதரக சபைகளின் மூலம் உழைக்கப்படும் வருமானத்தை சேகரித்தல் மற்றும் ஆக்கபூர்வமான வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு அப் பணம் சேவைகள் வழங்குவதற்கு பயன்படுத்தப்படாமை.
(ஆ)	செயற்பாட்டுக் கட்டுப்பாடு	(i) காணிகள் கொள்வனவு செய்யும் போது முறையான உரிமையினை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
		(ii) வெளிநாட்டு தொழில் முகவரி நிலையங்களின் விடயங்களை கட்டுப்படுத்துவதற்கு மற்றும் நிருவகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை
(இ)	மனிதவள கட்டுப்பாடு	பணியகத்திற்கு சொந்தமான பௌதீக மற்றும் மனித வளக் கட்டுப்பாடு மற்றும் பயன்படுத்தல் முறைப்படி நடைபெறாமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச். எம். காமினி விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தலைவரின் அவதானங்களின் அறிக்கை

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் அதனது நிருவாகிக்கும் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	**தற்போதைய நிலை**
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.	

1 .2. நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கண்ககாய்வு ஈடுபடுகின்றது. தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்டுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2 நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை வெளிநாட்டு பணியகத்தின் மற்றும் அதனது நிர்வாக கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் - பணியகம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை வெளிநாட்டு பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்

செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.	
2 .2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் ----------	
2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலங்கை கணக்கீட்டு நியம 19 இன் பிரகாரம் பணிகொடை பொறுப்பு உடைய முதலீடு ஒன்று காணப்படின் குறிப்பிட்ட முதலீடு தொடர்பாக நியாயமான பெறுமதிக்கு சீராக்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு உண்மையான நலன் மற்றும் எதிர்பார்த்த நலன்களிடையே காணப்படும் வித்தியாசம், ஆயள்கணிப்பு பெறுமதி மதிப்பீட்டின் மீது கணிக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டம் என இனம் காண வேண்டும். எனினும் பணியகத்தினால் பணிக்கொண்டப் பொறுப்புடக்காக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 151,637,722 இற்கான பெறுமதிகளுக்காக நியாயமான பெறுமதிக்கு சீராக்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அந்த முதலீட்டு பெறுமதி ஆயுள் கணிப்பு பெறுமதி மதிப்பீட்டின் போது கவனத்தில் எடுத்திருக்கவில்லை.	இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் பணிக்கொடை பொறுப்புக்களைக் கொண்ட முதலீடுகளுக்கு நியாயமான பெறுமதி சீராக்கம் ஒன்றினை மேற்கொண்டு 2017 ஆம் ஆண்டிலே உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள் ----------	
மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுகளில் 02 கணக்கு விடயங்களில் முறையே ரூபா 2,453,136 இற்கான மற்றும் 21,140,548 இற்கான விளக்கமளிக்கப்படாத மீதிகள் உள்ளடங்கியிருந்த போதிலும் அம் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் குறிப்பிட்டுள்ள கணக்கில் (முற்பணக் கணக்கு) காணப்பட்ட ரூ.2,453,136 பெறுமதியான வித்தியாசம் பற்றி போதிய தகவல்கள் இன்மையால் இனங்காண முடியாதுள்ளது. மீளாய்வு ஆண்டின் கொடுக்கல் வாங்கல்களில் அவ்வாறானதொரு வித்தியாசமொன்று ஏற்படவில்லை என்பதனை அறியத் தருகின்றேன். குறித்த வித்தியாசத்தினை இனங்காணுவதற்காக தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொரிய ஆட்சேர்ப்புக் கட்டணக் கணக்கில் காணப்படுகின்ற இனங்காணப்படாத ரூ.21,140,548 பெறுமதியொன்று காணப்படுகின்றது. மீளாய்வு ஆண்டின் கொடுக்கல் வாங்கல்களின் போது அவ்வாறானதொரு வித்தியாசமொன்று இடம்பெறவில்லை என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன். குறித்த வித்தியாசத்தினை இனங்காணுவதற்கு தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டாகும் போது மேற்படி கணக்கில் நிலவிய இனங்காணப்படாத பெறுமதி ரூ.19,301,089.26 வரையில் குறைவடைந்துள்ளது.

2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் --- பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (அ) வெளிநாடு செல்வோரின் முறைப்பாடுகள் / சச்சரவுகளை இணக்கஞ் செய்வதற்கு முகவர் நிறுவனங்களினால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பணியகத்தில் வைப்புச் செய்திருந்த மீதி ரூபா 10,120,447 தொகையாக இருந்ததுடன் அதனுள் 2005 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ரூபா 6,788,954 இற்கான மீதியை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நட்டஈடுகள் செலுத்துவதற்காக பணியகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 4,781,403 இற்கான தொகையில் 2005 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பான ரூபா 939,510 தொகை பல்வேறு காரணங்களினால் 2016 திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட சாராருக்கு தீர்ப்பதற்கு முடியாதிருந்தது.	அ) வெளிநாடு செல்வோரின் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற'காக முகவர் நிறுவனங்களினால் பணியகத்தில் வைப்புச் செய்திருந்த பெறுமதியில் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியுடன் தொடர்புடைய 2017.12.31 ஆம் திகதியன்று தீர்க்கப்படாதுள்ள பெறுமதி ரூ.4,307,784.29 வரையில் குறைவடைந்துள்ளது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் போதும் இது பற்றி கலந்துரையாடியதுடன், இப்பெறுமதியினை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. ஆ) 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியுடன் தொடர்புடைய ரூ.939,510/- பெறுமதியொன்று பல்வேறு காரணங்களின் மீது தொடர்ந்தும் தீர்க்கப்படாத பெறுமதியொன்றாக காணப்படுகின்றது. குறித்த காப்புறுதி பெற்றவர்களின் தகவல்களில் காணப்படுகின்ற ''ர்த்தியின்மை பற்றி நலன்புரி பிரிவினால் தீர்த்து வைத்ததன் பின்னர் குறித்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

(இ)	வெளிநாட்டு தூதரக நலன்புரி பிரிவில் இருந்து 2006 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக சேகரித்து பணியகத்திற்கு அனுப்புவதற்காக திறைசேரிக்கு அனுப்பியிருந்த தொழிலாளர் ஒப்பந்த உடன்படிக்கைக் கட்டணம் ரூபா 2,622,815,725 இல் ரூபா 953,461,366 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை பணியகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.	இ) வெளிநாட்டு தூதரக நலன்புரி பிரிவினால் பொது திறைசேரிக்கு மாற்றப்பட்டு பணியகத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய தொகையில் ரூ.83,505,565.05 பெறுமதியான தொகை 2017 ஆம் ஆண்டிற்காக பணியகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூ.869,955,801.22 என குறிப்பிட விரும்புகின்றேன். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் போதும் இது பற்றி கலந்துரையாடப்பட்டதுடன், குறித்த தொகையினை திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய பங்கிலாபங்களில் இருந்து குறைத்துக்கொள்வதற்கு உத்தேசிக்கின்றேன்.
(ஈ)	2000 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் 84 வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 658,250 இற்கான செஸ்வரி 2016 திசெம்பர் 31 திகதி வரையும் அறவீடு செய்வதற்கு அல்லது அது தொடர்பாக வேறு பொருத்தமான நடவடிக்கை ஒன்று பணியகத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	(ஈ) வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களினால் 2017.12.31 ஆம் திகதியன்று தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டி காணப்பட்ட மீதி ரூ.493,250 ஆகக் காணப்படுவதுடன், வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களுக்குச் செலுத்துகின்ற முகவர் நிறுவனக் கட்டணத்தில் இருந்து குறித்த தொகை அறவிடப்படுகின்றது
(உ)	2013 ஆண்டு மற்றும் 2014 ஆண்டு தொடர்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொலைபேசி விலைப்பட்டிகளை தீர்ப்பதற்காக தொடர்பாக வரிசை அமைச்சிலிருந்து பெற வேண்டிய ரூபா 3,213,783 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	(உ) 2017.12.31 ஆம் திகதியன்று நேர்வரிசை அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொலைபேசிப் பட்டியல்களின் பெறுமதி ரூ.11,055,414.11 ஆகக் காணப்படுவதுடன், 2013 - 2014 ஆண்டுகளுக்கு ரூ.3,213,783.19 பெறுமதியான தொகை கிடைக்க வேண்டிய தொகையாக இந்த மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

	திறைசேரியினால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொலைபேசிப் பட்டியலை மீள் நிரப்புச் செய்வதுடன் தொடர்புடைய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையினால் குறித்த செலவினை பணியகத்தின் செலவொன்றாக கணக்குப் பதிவு வைக்குமாறு அமைச்சின் செயலாளர் அவர்களினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் 2018 ஆம் ஆண்டிலே தேவையான சீராக்கங்களை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஊ) 2008 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை விமான நிலைய அலகுகள் மூலம் பணியக பதிவு செய்தல்களைப் பெற்றுக் கொடுக்கும் போது அறவிடப்பட வேண்டிய மொத்தக் கட்டணத்தை செலுத்தாத வெளிநாடு செல்வோரிடம் பெற வேண்டிய ரூபா 602,759 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு அல்லது அது தொடர்பாக வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	(ஊ) சம்பந்தப்பட்ட வெளிநாடு செல்வோரினால் மீண்டும் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இத்தொகை அறவிடப்படுவதனால் அறவீட்டுப் பணிகள் மிகவும் மந்த நிலையிலேயே இடம்பெறுகின்றன. 2017.12.31 ஆம் திகதியன்று மேலும் அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூ.525,987 ஆகும்.
(எ) பணியகத்திற்கு சொந்தமான சேர்ந்த கட்டிடமொன்றில் நடாத்தப்படும் ஓமான் தூதரகத்திற்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இருந்து 2013 ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 52,270,080 தொகையின் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.	(எ) இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இது வரையில் குறித்த கொடுப்பனவுகள் வெளியுறவு அமைச்சினால் மேற்கொள்ளப்படவில்லை.
(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 37,172,298 தொகைக்கான	

	பலவின கடன் கொடுத்தோர் மீதியில் 2012 ஆண்டு முதல் 2015 வரையான காலப்பகுதிகள் தொடர்பான ரூபா 24,317,214 தொகையான மீதி 2017 ஜ˜ன் 30 திகதி வரை தீர்ப்பதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு பணியகம் செயற்பட்டிருக்கவில்லை.	(ஏ) பல்வேறு கடன் கொடுத்தோர் மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதிகளில் ரூ.22,996,225 பெறுமதியான தொகை 2012 முதல் 2015 வரையான ஆண்டுகளுடன் தொடர்புபட்ட போதிலும், அத் தொகையினை செலுத்த வேண்டிய மீதியாக இனங்கண்டு 2016 ஆம் ஆண்டிலேயே கணக்குப் பதிவுகள் வைக்கப்பட்டுள்ளன. மேற்படி செலுத்த வேண்டிய மீதிகளை இனங்கண்டு கணக்குப் பதிவுகள் மேற்கொண்ட போதிலும், குறித்த சேவைகளை ”ர்த்தி செய்ததாக போதிய அட்டவணைகள் மற்றும் உரிய அனுமதிகள் என்பவற்றுடன் நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே தீர்க்கப்படக் கூடியதாக உள்ளது.
(ஐ)	2015 ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்த கொரியா விசா வைப்புகள் ரூபா 730,200 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்திருக்கவில்லை.	ஐ) கொரிய வீசா வைப்புத் தொகை ரூ.730,200/- பெறுமதியான தொகையில் மேலும் தீர்க்கப்பட வேண்டியுள்ள மீதி ரூ. 678,000 ஆகும். கொரியப் பிரிவினால் போதிய ஆவணங்களுடன் நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கின்ற வவுச்சர்களுக்கு உரிய தீர்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பாக கொரிய பிரிவிற்கு நிதிப் பிரிவிடம் காணப்படுகின்ற அட்டவணைகளை இணக்கம் காணுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஒ) கொரிய அனுமதிப்பத்திர கட்டணத்திற்கான 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக அறவீடு செய்யப்பட்டிருந்த ரூபா 89,184,454 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரையும் கொரியா வேலைவாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஒ) 2011 முதல் 2015 வரையிலான காலப் பகுதியுடன் தொடர்புடைய கொரிய அனுமதிப்பத்திர கட்டண பெறுமதிக் கணக்கில் தொடர்ந்தும் தீர்க்க வேண்டியுள்ள மீதித் தொகை ரூ.19,301,089.26 ஆகும். மேற்படி மீதியில் இன்னமும் தீர்க்கப்படாது காணப்படுகின்ற பெறுமதி 2018 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது வருமானம் ஒன்றாக கணக்குப் பதிவு வைப்பதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.
(ஒ) ஊழியர் கடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட ஒரு வருட காலத்தை மிகைத்து இடர் மற்றும் வாகனக் கடன் மீது ரூபா 2,222,165 தொகையாக இருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஒ) ஒரு வருட காலத்தைத் தாண்டியுள்ள ஒருசில ஊழியர்களின் கடன் மீதிகள் அறவிடப்பட்டுள்ளதுடன், அறவிட முடியாது போயுள்ள ஏனைய அலுவலர்களின் கோப்புக்கள் பற்றிய கடன் தொகையினை அறவிடல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்	
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.	
சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு	**இணக்கமின்மைகள்**
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை	
(i) நிதிப் பிரமாணம் 371	துணைக் கட்டு நிதிகளாகப் பெற்றிருந்த முற்பணங்கள் வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு அப்பால் தாமதிக்கக் கூடாது எனினும் அதற்கு முரணாக 2003 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 7,559,410 தொகைக்கான கட்டுநிதிகள் முற்பணத்தை தீர்த்திருக்கவில்லை.
	(i) இதில் ரூ.182,500 பெறுமதியான முற்பணம் 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுவதுடன், அவற்றினை அறவிட்டுக் கொள்வதற்கான வாய்ப்பின்மையால் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. முற்பண இலக்கம் 1103/B/14 ரூ.1,891,500 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அது பற்றிய விசாரணைகள் இடம்பெற்று

(ii) நிதிப் பிரமாணம் 571	திருப்பி செலுத்த வேண்டிய ரூபா 1,875,084 தொகைக்கான கேள்வி வைப்புக்களுள் 05 வருடங்களை மிகைத்த ரூபா 578,680 இற்கான வைப்புக்களை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வருகின்றன. ரூ.3,962,350 பெறுமதியான முற்பணத்தைத் தீர்த்தல் தொடர்பில் முறையான விசாரணையொன்று தற்போது இடம்பெற்று வருகின்றது. மீதி ரூ.1,523,060/- தொகை ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளது..
(iii) நிதிப் பிரமாணம் 757(2)	2014 ஆண்டிற்கான சொத்துக்கள் மெய்மையாதலின் போது இனங் காணப்பட்ட 2106 உபகரண விடயங்கள் காணாமல் போனது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	(ii) மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புத் தொகையினை தீர்ப்பதற்காக பத்திரிகை விளம்பரம் ஒன்று பிரசுரிக்கப்பட்டது. எனினும் குறித்த காலப் பகுதியினுள் குறித்த தரப்பினர்கள் எவரும் முன்வரவில்லை. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அனுமதியின் மீது குறித்த மீதியை வருமானம் ஒன்றாக கணிப்பிடுவதற்காக 2017 ஆம் ஆண்டிலே குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.
(ஆ) 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	பணியகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.	(iii) சொத்துக்கள் மெய்மையாதலின் போது இனங்காணப்பட்ட காணாமல் போன உபகரணங்களில் அதிகமானவை ஒரு நிலையத்திலிருந்து மற்றுமொரு நிலையத்திற்கு மாற்றும் போது நிலையான சொத்துகள் பற்றிய ஆவணங்களில் சரியானவாறு பதியப்படாமையினால் இடம்பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிலையான சொத்துகள் பௌதீக கணக்கெடுப்புக்களின் போது இவ்வாறு காணமற் போன பொருட்கள் மிகவும் குறைந்த பெறுமானத்தையே

		கொண்டுள்ளதாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.
(இ) 2003 ஜூலின் 02 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க சமர்ப்பிக்கப்பட பொது முயற்சிச் சுற்றரிக்கையின் 6.5.1 ஆம் பந்தி	நிதிக்கூற்றுக்களுடன் வேண்டிய வரைவு வருடாந்த அறிக்கை 2017 நவம்பர் 24 திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.	ஆ)பணியகத்தினால் இந்த நிலையான சொத்துகள் பற்றிய ஆவணமொன்று நிதி அறிக்கைகளுடன் ஒப்பீடு செய்து பேணி வரப்படவில்லை. எனினும், நிலையான சொத்துகள் பற்றிய அறிக்கையினை பராமரித்து வருவதுடன் ஒவ்வொரு பிரிவுகளிலும் காணப்படுகின்ற நிலையான சொத்துகளை அதன் பிரகாரம் இனங் காண முடியும். நிதி அறிக்கைகளுடன் நிலையான சொத்துகள் பற்றிய ஆவணங்களை ஒப்பீடு செய்ய முடியாதுள்ளமையினால் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் உதவியினைப் பெற்று சொத்துகளுக்கு விலை மதிப்பீட்டினை மேற்கொண்டு அதன் பெறுமதிகளை நிதிக் கூற்றுகளுடன் தொடர்புபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் புதிய கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நிலையான சொத்துகளை முறையான ஆவணம் ஒன்றின் மூலம் பேணி வருவதற்கு தேவையான பணிகளை மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ளேன். இ) பணியகத்தின் நிதிப் பிரிவினால் ஏனைய பிரிவுகளினால் வழங்கப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆண்டு வரையில் பணியகத்தின் ஆண்டறிக்கையினை தயாரித்து ஒவ்வொரு ஆண்டிலும் குறித்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

	கடந்த ஆண்டுகளுக்குரிய அறிக்கைகள் முகாமைத்துவத்தினால் அவதானிப்புச் செய்யப்பட்டதுடன் பணியகத்தின் ஆண்டறிக்கை தொழில்சார் ரீதியாக மற்றும் ஆக்கத்திறன்மிக்க வகையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதனால் அப்பணியினை மேற்கொள்வதற்காக பணியகத்தின் திட்டமிடல் பிரிவிடம் முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்பட்டது. அவர்களினால் இதற்காக குழுவொன்றினை நியமித்து பல்வேறு பிரிவுகளுடன் தொடர்புடைய தகவல்களை ஒன்று திரட்டி உள்ளதுடன் பெறுகை முறைமையின் ஊடாக பொருத்தமான வழங்குநர் ஒருவரின் மூலம் இப்பணியினை நிறைவேற்றுவதற்கு கேள்வி ஒப்படைக்கப்பட்டுள்ளது.
	அதன் பிரகாரம் வரைவுகள் பற்றிய ஆண்டறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திடம் 2017.07.31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்திருந்ததுடன் இதுவரையில் குறித்த அறிக்கையினை பூர்த்தி செய்வதற்கு முடியாது போயுள்ளது. தற்போது குறித்த நிறுவனத்தினால் வரைவு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வரும் நிலையில் உள்ளது. குறித்த பணியினை பூர்த்தி செய்ததுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திடம் அதன் பிரதி ஒன்றினை சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
(ஈ) 2014 நவம்பர் 22 ஆம் திகதிய PRE/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளர் சுற்றறிக்கையின் 05(i) ஆம் பந்தி	சுற்றறிக்கைக்கு முரணாக பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்கள் தேர்தல் காலப்பகுதியில் ரட்டவிரு அமைப்பின் நிகழ்ச்சித் திட்டத்திற்கான பயன்படுத்துவதற்கான வாடகை அடிப்படையில் பெற்றிருந்த வாகனங்களுக்காக 2016 ஆண்டின்	ஈ) 2014 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல்

போது ரூபா 2,858,641 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ரட்டவிரு அமைப்பின் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்கும் அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குமாறு பதுளை மாவட்ட அலுவலகத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்ததுடன் அதற்கான அனுமதியின் மீது அதற்கு தேவையான வாகனங்கள் பதுளை அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டன. அதன் போது பணியக வாகனங்கள் போதியதாக காணப்படாமையினால் வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டது.

2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2003 ஜ¯ன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் பணியக உத்தியோகத்தர்களுக்கு தின வரவு படி, மாதாந்த இலக்கை நிறைவேற்றல் படி, விமான நிலைய அலகின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள், 24 மணித்தியாளங்கள் ”ராகவும் செயற்படும் வெளிநாடு சென்றோர் தொடர்பாக தகவல் ஒலிப்பதிவு கூடத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விஷேட படிகள்

பணியகத்தினால் பணிப்பாளர் சபையின் அனுமதியின் மீது வரவுக் கொடுப்பனவு, மாதாந்த இலக்கினை அடைந்து கொள்வதற்கான கொடுப்பனவு, விமான நிலைய அலகுகளின் மற்றும் சஹன பியஸ நிலையங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கான விசேட கொடுப்பனவு, 24 மணித்தியாலம் முழுவதும் இயங்குகின்ற குடியகழ்ந்தோர் பற்றிய தகவல் கூடத்தில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கான கொடுப்பனவு மற்றும் இடர் கொடுப்பனவு என்பன செலுத்தப்படுகின்றன.

I. தின வரவுப் படி

தொழில் வாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள குடியகழ்ந்த ஊழியர்களின் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலன்புரி வசதிகள் மற்றும் நல்வாழ்வினை

செலுத்தல் மற்றும் ஆபத்து படி என ரூபா 64,491,839 இற்கான பலவித படிகள் செலுத்தப்பட்டிருந்தன.	உறுதிப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறையினை ஒழுங்குபடுத்தல் மற்றும் நிருவகித்தல் என்பவற்றுக்காகவும் பணியாற்றுகின்ற பதவியணியினரை ஊக்குவித்து அவர்களது சேவையினை தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளும் நோக்கும் 2009.08.11 ஆம் திகதிய பணியக பணிப்பாளர் சபை தீர்மான இல. 25:42:04 இன் பிரகாரம் வழங்கியுள்ள அனுமதியின் கீழ் 2009.09.01 ஆம் திகதி முதல் பதவியணிக்கான வரவு கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் வரவு கொடுப்பனவு செலுத்துவதன் ஊடாக பதவியணியானது நிதிசார் அடிப்படையில் வலுவூட்டப்படுவதுடன் இதன் மூலம் ஊழியர்கள் விடுமுறை பெறுகின்ற அளவு குறைவடைவதன் ஊடாக குடியகழ்ந்த ஊழியர்களுக்கு வினைத்திறனான சேவையொன்றினை பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பு பணியகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. (இணைப்பு 04) **II. மாதாந்த இலக்கை நிறைவேற்றல் படி** குடியகழ்ந்த மக்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பணியகத்தின் பிணக்கிணக்க பிரிவு பரந்த அளவில் சேவையாற்றி வருவதுடன் அவ்வாறே, பிணக்கிணக்க பிரிவினால் பணியகத்தின் நற்பெயரை பிரதிபலிக்கவும் செய்கின்றது. இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் பற்றி அடிக்கடி பல்வேறு அரச நிறுவனங்களினதும், ஊடகங்களினதும் கவனம் செலுத்துப்பட்டுள்ளதுடன், பிணக்கிணக்க பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் குடியகழந்த மக்களினதும் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களதும் வாழ்க்கையுடன் நேரடி

	தொடர்பினை கொண்டுள்ளமையினால் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் வினைத்திறனாகவும் தாமதமின்றியும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. யாதேனும் ஒரு விதத்தில் தாமதகங்கள் ஏற்படும் பட்சத்தில் அது குடியகழ்ந்த ஊழியர்களின் உயிருக்கும் சில நேரங்களில் ஆபத்தினை ஏற்படுத்துவதுடன் இவ்வாறான நிலைகள் கடந்த கால அனுபவங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான நிலையில் பிணக்கிணக்க பிரிவின் பணிகளை மிகவும் வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்காக அலுவலர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அலுவலர்களுக்கு இலக்குகளை பெற்றுக் கொடுத்து அதன் பிரகாரம் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தும் முறையொன்று 2011.07.22 ஆம் திகதிய பணியகத்தின் பணிப்பாளர் சபை தீர்மான இலக்கம் 27:39:10 இன் கீழ் 2011.08.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு செலுத்தும் பணியானது செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதுடன் அலுவல்கள் தமது பிரிவுகளின் பணிகளை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதன் ஊடாக குறித்த இலக்கினை பூர்த்தி செய்து ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒன்றினை உழைத்துக் கொள்ளல் வேண்டும். ஆகக் குறைந்த செயலாற்றுகை மட்டமாக மாதம் ஒன்றிற்கு முறைப்பாட்டு கோப்புக்கள் 30 இற்கு மேல் தீர்க்கப்படுதலை அடிப்படையாகக் கொண்டு இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவானது வழங்கப்படுகின்றது.

	2013.12.12 ஆம் திகதிய பணியகத்தின் பணிப்பாளர் சபை தீர்மான இல. 29:80:15 இன் பிரகாரம் ஆகக் குறைந்த செயலாற்றுகை மட்டமாக மாதம் ஒன்றில் 40 கோப்புக்களுக்கு மேல் தீர்வினை பெற்றுக் கொடுத்து பூர்த்தி செய்தலை அடிப்படையாகக் கொண்டு இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவினை வழங்குவதற்கு 2013.12.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அவ்வாறே வெளிநாட்டு உறவுகள் 02 பிரிவின் அலுவலர்களினாலும் குடியகழ்ந்த ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்த்தல் தொடர்பான கடமை பணிகளில் ஈடுபடுகின்றமையினால் அப்பிரிவைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் 2011.09.28 ஆம் திகதியன்று இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது பணிப்பாளர் சபை பத்திர இல. 76/2011(M-08) இற்கு தீர்மான இல. 27:53:06 இன் கீழ் வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் வெளிநாட்டு உறவுகள் 02 பிரிவைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் மாதாந்த இலக்கினை அடைவதனை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு கொடுப்பனவினை வழங்குவதுடன் குறித்த அலுவலர்களினால் மாதாந்த இலக்கினை ”ர்த்தி செய்து குறித்த கொடுப்பனவினை உழைத்துக் கொள்ளல் வேண்டும். **III. விமான நிலைய அலகுகளின் மற்றும் சஹனபியஸ அலகில் பணியாற்றும் அலுவலர்களுக்கான விசேட கொடுப்பனவு**.

	• **உணவு கொடுப்பனவு** பணியகத்தின் விமான நிலைய அலகுகள் மற்றும் சஹனபியஸ நிலையத்தின் பணிகள் நாளாந்தம் 24 மணித்தியாலமும் ஷிப்ட் சேவை முறையின் கீழ் இயங்குகின்றது. இம்முறையின் கீழ் பணியாற்றுகின்ற பதவியணிக்கான உணவு பானங்களை வெளியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக காணப்படுகின்றமையினால் மற்றும் விமான நிலைய அலகுகளின் சிற்றுண்டிச்சாலைகளின் உணவு பானங்களின் விலை மிகவும் அதிகமாக காணப்படுகின்றமையினாலும் விமான நிலையங்கள் மற்றும் சஹனபியஸ சேவையில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்காக உணவு கொடுப்பனவு ஒன்று வழங்கப்படுகின்றது. குறித்த பணிப்பாளர் சபை தீர்மானம் இணைக்கப்பட்டுள்ளது. • **இலக்கை நிறைவேற்றல் படி** கட்டுநாயக்க விமான நிலைய அலகு மற்றும் சஹனபியஸ நிலையத்தின் பதவியணிக்காக விமான நிலைய அலகின் மாதாந்த வருமானத்தை திரட்டும் இலக்காக 17.5 மில்லியன் ரூபாவினை தாண்டும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு விசேட கொடுப்பனவொன்றினை செலுத்துவதற்காக 2007.10.11 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது பணிப்பாளர் சபை தீர்மான இல. 23:56:04:01 இன் கீழான அனுமதியின் பிரகாரம் விசேட கொடுப்பனவு செலுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 2007.09.21 ஆம் திகதிய பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட இல. 106/2017/(M-08) உடைய பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு தீர்மான இல.33:53:12 இன் கீழ் கிடைக்கப் பெற்ற அனுமதியின் பிரகாரம் இக்கொடுப்பனவானது தொடர்ந்தும்

	செலுத்தப்படுகின்றது (இணைப்பு). • கஷ்ட கொடுப்பனவு (Hardship Allowance) பணியக சட்டத்தின ஏற்பாடுகளின் பிரகாரம், வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்லுகின்றமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உள்ள இறுதி சேவை கரும பீடம் பணியகத்தின் விமான நிலைய அலகாக காணப்படுவதுடன் சட்ட விரோதமான முறைகளில் மனித வியாபாரத்தில் ஈடுபட்டு நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் பணியினை தடுப்பதற்காக பணியகத்தின் விமான நிலைய அலகிற்கு விசேட பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணியகத்தின் நோக்கம் மற்றும் இலக்கினை அடைந்து கொள்வதற்காக பரந்தளவிலான பொறுப்பொன்றினை நிறைவேற்றுகின்ற 24 மணித்தியாலம் முழுவதும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியை ஊக்குவித்து அரசாங்கத்திற்கு அறவிட்டுக் கொள்ள வேண்டிய பதிவுக் கட்டணத்தை அறவிட்டு அரச வருமானத்தை பலமூட்டுவதற்காக அர்ப்பணித்து பணியாற்றுகின்ற பதவியணியை ஊக்குவிப்பதற்காக விமான நிலைய அலகின் பணியாற்றும் அலுவலர்களுக்கு 1994 ஆம் ஆண்டு முதல் இக்கொடுப்பனவு செலுத்தப்பட்டு வருவதுடன், இல. 107/2017/(M-08) உடைய பணிப்பாளர் சபை பத்திர தீர்மான இல. 33:53:13 இன் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அனுமதியின் பிரகாரம் இந்த விசேட கொடுப்பனவானது தொடர்ந்தும் வழங்கப்படுகின்றது. **IV. விமான நிலைய அலகின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள், 24 மணித்தியாளங்கள்**

	”ராகவும் செயற்படும் வெளிநாடு சென்றோர் தொடர்பாக தகவல் ஒலிப்பதிவு கூடத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விஷேட படிகள் உலகம் முழுவதிலும் உள்ள வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஊழியர்களுக்கு தேவையான தகவல்களை ஒரு நாளின் 24 மணித்தியாலம் முழுவதும் வழங்கும் நோக்குடன் 24 மணித்தியால தகவல் கூடம் பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பணிகள் ஷிப்ட் முறையின் கீழ் நாளாந்தம் 24 மணித்தியாலமும் அமுலில் உள்ளது. அதில் பணியாற்றுகின்ற ஊழியர்களை ஊக்குவித்து மிகவும் பயன்வாய்ந்த சேவையொன்றினை குடியகழ்ந்த மக்களுக்கு வழங்குவதற்கு குறித்த கொடுப்பனவுகள் 24 மணித்தியால சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்காக 2012.04.01 முதல் வழங்கப்படுகின்றது. **V. ஆபத்து படி** வெளிநாடு சென்றுள்ள ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலன்புரி பணிகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறையின் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிருவகித்தல் பணிகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியின் மேம்பாட்டு பணிகள் என்பவற்றில் ஈடுபடுகின்ற பதவியணியானது தமது சேவையினை நிறைவேற்றுவதற்கு மிகவும் வேலைப்பழுமிக்க சூழல் ஒன்றினுள் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் ஒவ்வொரு பிரிவுகளிலும் பணியாற்றி வருகின்றனர். வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறையின் பணிகள் விஸ்தரிக்கப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பரந்து காணப்படுவதுடன்

3. நிதி செயலாற்றுகை --- **3.1 நிதி விளைவுகள்** --- சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது தொகுதியின் மற்றும் பணியகத்தின் நிதி விளைவுகள் முறையே ரூபா 944,363,600 தொகை மற்றும் ரூபா 942,355,085 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்ரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் முறையே ரூபா 884,713,213 தொகை மற்றும் ரூபா 883,817,095 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் தொகுதியின் மற்றும் பணியகத்தின் நிதி விளைவுகள் முறையே ரூபா 59,650,387 இனால் மற்றும் ரூபா 58,537,990 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. செயற்பாட்டு மற்றும் நிதி வருமானம் ரூபா 622,757,544 இனால் அதிகரித்தல் மற்றும் விளம்பர செலவுகளில் மற்றும் நலன்புரி நிதியத்தின் ஏனைய செலவுகள் ரூபா 44,714,891 இனால் குறைவடைதல் மேற்கூறிய வளர்ச்சிக்கு காரணமாகியுள்ளது. மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை தேறிய இலாபத்தில் வளர்ச்சி ஒன்று காணப்பட்ட போதிலும் அது 2015	அதன் மூலம் ஒரு அலுவரினால் நிறைவேற்ற வேண்டிய கடமையானது அதிகரித்துள்ளமை காணக்கூடியதாக உள்ளது. அலுவலர்களினால் இடர் தன்மைகளை பாராது மேற்கொள்கின்ற அவ்வாறான பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு பணிப்பாளர் சபையினால் 2013.11.14 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மான இல. 29:74:02 இன் கீழ் வழங்கியுள்ள அனுமதியின் பிரகாரம் 2013.11.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இக்கொடுப்பனவானது வழங்கப்படுகின்றது.

ஆண்டின் போது சிறு அளவில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் 2016 ஆண்டின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 57.5 சதவீதத்திற்கான வளர்ச்சி ஒன்று காணப்பட்டது. மேலும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனங்கள், அரசுக்கு செலுத்திய வரி மற்றும் பெறுமானத் தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 1,252,718,830 இற்கான பணியகத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,640,624,061 தொகை வரை வளர்ச்சியடைந்ததுடன் 2015 ஆண்டிற்கு நேரொப்ப அவை 50 சதவீதத்திற்கான வளர்ச்சி ஒன்றினை அடைந்திருந்தது.	சட்டப் பிரிவினால் இனங்காணப்பட்டுள்ள சாத்தியமாகா பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
3.2 பணியகத்திற்கு எதிராக அல்லது பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள் --- வெளி மற்றும் உள் சாராரினால் பணியகத்திற்கு எதிராக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் பணியகத்தினல் அதற்காக ரூபா 73,766,962 தொகை எதிர்பார்க்கும் பொறுப்புகள் என இனங்காணப்பட்டிருந்தது.	

4. செயற்பாட்டு மீளாய்வு --- **4.1 செயலாற்றுகை** --- பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (அ) பணியகத்திற்கு செய்திருந்த முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. (i) 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை கிடைத்திருந்த முறைப்பாடுகளில் 2267 தொகை 2016 ஜனவரி 01 திகதி அளவில் தீர்க்கப்படாமல் இருந்ததுடன் வருட இறுதியளவில் அவற்றில் 244 தொகை மேலும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது. (ii) 2016 ஆண்டின் போது கிடைத்திருந்த 5,686 முறைப்பாடுகளில் 2,320 தொகை எனப்படும் 41 சதவீதம் மாத்திரம் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.	**(அ)** i. 2010 முதல் 2015 வரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் 244 முறைப்பாடுகள் தீர்கக்ப்படாதுள்ளதாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். எனினும் இதுவரையில் அக்காலப் பகுதியில் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் 69 மாத்திரமே தீர்க்கப்படாதுள்ளது. (2018.02.14) ii. ஒவ்வொரு ஆண்டு காலப் பகுதியினுள்ளும் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை அந்த ஆண்டினுள்ளேயே பூர்த்தி செய்வதற்கு முடியாது போகின்ற சந்தர்ப்பங்கள் பின்வருமாறு .

	01. தூதரகங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் என்பவற்றிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற தகவல்களின் மீது முறைப்பாடுகளை தீர்க்கப்பட வேண்டி ஏற்படுவதுடன் இதன் மூலம் தகவல்களை வழங்குவதற்கு தாமதங்கள் ஏற்படலாம். 02. உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டு அதனை நிறைவேற்றுவதற்கு எடுக்கின்ற காலத்திற்கு ஏற்ப முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு எடுக்கும் காலமும் தீர்மானிக்கப்படுகின்றது. 03. ஒரு சில குடியகழ்ந்த ஊழியர்கள் வேலைத்தளங்கள் பலவற்றிற்கு மாறியுள்ள சந்தர்ப்பங்களில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்க காலம் எடுப்பதனால் அவ்வாறான கோப்புகளை தீர்ப்பதற்காக எடுக்கும் காலம் அதன் மூலமே எடுக்கப்படுகின்றது. 04. கோப்புக்கள் சட்டப் பிரிவிடம் வழங்கப்பட்டதன் பின்னர் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக எடுக்கின்ற காலம். 05. தூதரகங்களினால் ரீ.பீ.என் (TPN) ஒன்றினை சமர்ப்பித்ததன் பின்னர் அதிலிருந்து தீர்ப்பொன்றினை பெற்றுக் கொடுப்பதற்காக எடுக்கின்ற காலத்திற்கு ஏற்ப முறைப்பாடுகளை தீர்ப்பதற்கான தாமதங்கள் ஏற்படுகின்றன.
(iii) மீளாய்வாண்டின் போது முறைப்பாட்டாளர்கள் தொடர்ந்து செயற்பட தேவையில்லை என அறவித்தல் மற்றும் முறைப்பாட்டாளர்களிலேயே கோவைகள் மூடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 1,911 ஆகும். அதன் பிரகாரம் தீர்ப்பு ஒன்று இன்றி கோவைகள் மூடப்படல் மற்றும் முறைப்பாட்டாளர்கள் தொடர்ந்து செயற்படத் தேவையில்லை என அறிவித்ததன் காரணமாக மூடி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட 2,274 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன்	iii. முறைப்பாட்டாளர் ஒருவரினால் பிணக்கிணக்கப் பிரிவிற்கு பிரச்சினை ஒன்று தொடர்பான முறைப்பாடு ஒன்றினை சமர்ப்பித்ததன் பின்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் மற்றும் தூதரகம் என்பவற்றின் ஊடாக பிரச்சினையை தீர்ப்பதற்கு பிணக்கிணக்கப் பிரிவானது பல்வேறு

அவை முறையற்றதென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்து உண்மையாகவே தொடர்ந்தும் சிக்கல் ஒன்று காணப்படுகின்றவா என பரிசோதனை மேற்கொள்வதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நடவடிக்கைகளை எடுக்கின்றது. அதன் மூலம் தீர்வொன்று வழங்கப்பட்டதன் பின்னர் தமது நிலை பற்றி முறைப்பாட்டாளருக்கு அறிவித்து தொடர்ந்தும் பணியகத்தினால் ஏதேனும் மேற்கொள்ளப்பட வேண்டுமா என முறைப்பாட்டாளரிடம் விசாரணைகளுக்கு பதிலாக முறைப்பாட்டாளர்களினால் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையில்லை என கூறுகின்றனர். அவ்வாறின்றி கோப்பு ஒன்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்க்காமல் அதனை முடிவுறுத்த முடியாது. அதன் பிரகாரம் முறைப்பாட்டாளரின் இணக்கப்பாட்டுடனேயே முறைப்பாடு ஒன்று முடிவுறுத்தப்படுகின்றது.
(iv) முறைப்பாடுகளுக்கு வழங்கியிருந்த தீர்ப்பு ஒன்று ஆக "வெளிநாடு சென்றிருந்த ஊழியர்கள் திருப்பி இலங்கைக்கு வரவழைத்தல்" என குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வாறு திருப்பி அழைத்திருந்த வெளிநாடு சென்றோர் 2016 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த முறைப்பாடுகள் 5,686 இல் 2016 ஊழியர்களை மீண்டும் இலங்கைக்கு தருவிப்பதன் மூலம் மாத்திரம் தீர்ப்பு வழங்கியிருந்தவையாக காணப்பட்டதுடன் இவ்வாறான சிக்கல்கள் மீண்டும் ஏற்படாதிருக்க நிரந்தர தீர்வு வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தும் நடைமுறையொன்றினை ஏற்படுத்துவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	iv. பிணக்கிணக்கப் பிரிவிற்கு கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் தொட்பில் அதன் தன்மைக்கு ஏற்ப கோப்புகளுக்குரிய தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் முறைப்பாட்டாளரின் கோரிக்கையானது குடியகழ்ந்த ஊழியரை வரவழைக்க வேண்டியுள்ளமையாயின் குடியகழ்ந்த ஊழியர்கள இலங்கைக்கு வரவழைக்கப்படுகின்றார். இங்கு ஒப்பந்த சேவைக்காலம் "ர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் சேவை பெறுநரினால் மீள அனுப்பாமை காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் பற்றி பணியகத்தினால் தலையிட்டுள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறே சேவை காலம் "ர்த்தியடைவதற்கு முன்னர் வரவழைக்குமாறு பணியகத்திடம் செய்த கோரிக்கைகளும் உள்ளன. அதன் பிரகாரம் முறைப்பாட்டாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப கோப்புக்களின் பணிகள் "ர்த்தி

(ஆ) பணியகச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று புதுப்படுத்தும் போது அங்கு 28 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை கடைப்பிடித்துள்ளதாக பணியகம் திருப்தி அடைய வேண்டியதுடன், சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் அந்த ஏற்பாடுகள் ஏதும் மீறப்பட்டிருப்பின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கும் இயலுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள 27 வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிலையங்கள் தொடர்பாக இரண்டு வருடங்களில் கிடைத்திருந்த முறைப்பாடுகள் மற்றும் வெளிநாடு செல்வதன் பரிசோதனை செய்த போது முகவர் நிலையங்களில் முறைப்பாடுகளால் அதிகரிப்பு ஒன்று மற்றும் இரண்டு வருடங்களில் வெளிநாடு சென்றவர்கள் குறைவடைந்ததை விட குறைந்த சதவீதத்தில் முறைப்பாடுகள் கிடைத்தல் குறைவடைந்திருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் வெளிநாடு செல்லல் அதிகரித்திருந்த போதிலும் அதைவிட கூடிய சதவீதத்தில் முறைபாடுகள் அதிகரித்திருத்தல் அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக பணியகம் மேற்கூறிய சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது சிக்கல் நிலைமை காணப்பட்டது.	செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்த சேவைக் காலத்தை ”ர்த்தி செய்யாது பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் இன்றி இடைநடுவே இலங்கைக்கு வருகின்ற ஊழியர்கள் மீண்டும் வெளிநாடுகளுக்கு செல்வதனை தடுப்பதற்காக நெறியற்றவராக ஆவணப்படுத்தப்படுகின்றனர். அதற்கான காரணம் அவ்வாறு வருகின்ற சந்தர்ப்பங்களில் சேவை பெறுநரிடம் பெற்றுக் கொண்ட பாரிய தொகை நிதியை மீள செலுத்த வேண்டி ஏற்படுகின்றமையாகும். **(ஆ)** தொழில் முகவர் நிறுவனம் ஒன்றின் ஊடாக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள ஊழியர்கள் தொடர்பில் கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளுக்கு பணியகம் எதிர்பார்க்கின்றவாறு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு அந்த தொழில் முகவர் நிறுவனம் முன்வருமாயின், அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் போது உள்நாட்ட வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திற்கு பிணக்கிணக்கப் பிரிவினால் சிபாரிசு வழங்கப்படுகின்றது.

4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள் --- பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (அ) இலங்கை சமுர்த்தி அதிகார சபை மற்றும் பணியகத்தின் ஒத்துழைப்புடன் வெளிநாடு செல்லும் ஊழியர்களுக்காக செயற்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 10,264 வெளிநாடு சென்றோருக்கு சமுர்த்தி வங்கியின் மூலம் ரூபா 2,998 மில்லியன் கடன் தொகையொன்று வழங்கியிருந்ததுடன் தற்போது அத்திட்டம் செயலிழந்துள்ளது. அவற்றில் 26 சதவீதம் ஆகிய 2674 வெளிநாடு சென்றவர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 610.14 மில்லியன் (20 சதவீதத்தினை) கடனை திருப்பி செலுத்துவதை புறக்கணித்திருந்தனர். மேலும் 1,573 வெளிநாடு சென்றோருக்கு கடன் வழங்கும் நிபந்தனைகளுக்கு முரணாக மற்றும் எதுவித பிணையுமின்றி மொத்தத் தொகையில் 12 சதவீதம் எனப்படும் ரூபா 360.27 மில்லியன்களுக்காக கடன் வழங்கியிருந்தது. மேலும் பணியகத்தினால் மேற்கூறிய விடயத்திற்காக சமுர்த்தி சபையில் வைப்புச் செய்திருந்த ரூபா 100 மில்லியன் வைப்புத் தொகையின் வட்டியும் 2014 ஆம் ஆண்டு முதல் கிடைத்திருக்கவில்லை.	**அ)** பணியகத்தினால் 2013.12.31 திகதி வரை 15% வட்டி ஒன்று சமுர்த்தி அதிகார சபையிடம் பெற்றுக் கொண்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டு முதல் இது வரையில் எதுவித வட்டியும் கிடைக்கப்பெற்றில்லை. எனினும் நாம் வைப்புச் செய்த பணத்தை மீளப் பெறவில்லை. மீண்டும் வட்டி செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளோம். வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் ஆரம்ப வைப்புத் தொகையான 100 மில்லியன் ரூபா பெறுமதியான மீதியினை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் ஒன்றினை பெற்றுக் கொண்டு கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வட்டி வருமானத்தை

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அபூதாபி அலுவலகத்தின் 2014 ஜூன் மாதம் ஏற்பட்டிருந்த ரூபா 1,058,276 இற்கான நிதி மோசடி தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு 2014 ஜூன் 17 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டு மூன்று வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அதில் கணிசமான முன்னேற்றமொன்று கணக்காய்வின்போது அவதானிக்கப்படவில்லை. இது தொடர்பாக பணியகத்தினால் முறையான செயற்பாடுகளும் எடுத்திருக்கவில்லை.	அறவிடல் தொடர்பாக நம்பிக்கையற்ற நிலையொன்று காணப்படுவதனால் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் கணக்குகளில் பதியப்படவில்லை. எனினும், ஆரம்ப வைப்பு தொகை தொடர்பாக இரு தரப்பினர்களுக்கிடையிலும் பிரச்சினைகள் இன்மையினால் குறித்த தொகை தொடர்பில் கணக்குகளில் சீராக்கம் செய்ய வேண்டிய தேவை இல்லை.
(இ) பணியகத்தினால் 101 சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 2,822,750 இற்கான முற்பணத் தொகையில் ரூபா 1,762,741 தொகை அதாவது 50 சதவீதத்தை விட கூடிய தொகையொன்று பயன்படுத்தப்படாமல் மீண்டும் பணியகத்திற்கு தீர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முற்பணத் தொகை முறையான முகாமைத்துவத்துடன் வழங்கியிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.	ஆ) இது பற்றி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் ”ர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2018.01.10 ஆம் திகதிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு செயலாளரினால் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பணியகத்தின் சட்டப் பிரிவினால் அது பற்றிய மேலதிக நடவடிக்கைகளை தேடிப் பார்க்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. இ) முற்பணம் செலுத்தும் போது குறித்த உத்தியோகத்தர்களினால் யாதேனும் ஒரு பணியினை மேற்கொள்வதற்காக கோரிக்கை விடுக்கின்ற தொகையினை பெற்றுக் கொடுக்கும் முறை இடம்பெறுகின்றது. ஒரு சில சந்தர்ப்பங்களில் உறுதியாக செலவினத்திற்கான குறித்த முற்பணத் தொகை பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் உறுதியாக செலவினம் பற்றி கூற முடியாத சந்தர்ப்பங்களிலும் முற்பணம் வழங்கப்படுகின்றது.

(ஈ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95 மில்லியன் உடைய வ/ப கஹகொல்ல பொறியியல் சேவை கம்பனிக்கு சொந்தமான காணி ஒன்று 99 வருட குத்தகைக்கு பெறுவதற்காக பணியகத்தினால் 2013 ஆண்டின் போது ரூபா 20 மில்லியன் முற்பணமொன்று வ/ப அரச மூலவள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2013 ஜனவரி 17 திகதிய 10/2013 (M-01) இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கட்டிடங்களின் மற்றும் காணியின் சிக்கலற்ற உரிமையைப் பெற்றுக் கொள்ளுமாறு பணியகத்திற்கு அறிவித்திருந்த போதிலும் 2017 அக்டோபர் வரை காணியின் சிக்கலற்ற உரிமையை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.	நிதிப் பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலே 1199 முற்பணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 101 முற்பணங்கள் மொத்த முற்பணங்களில் 9% மாத்திரம் ஆகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவை கோரிக்கை விடுத்த தொகையில் குறைவாக கொடுக்கப்பட்டுள்ளவையாகும். குறித்த அலுவலர்களினால் சிறந்த கட்டுப்பாடுடன் முற்பணத் தொகையினை பயன்படுத்துவதன் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விடவும் குறைவான செலவு உண்மையாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் நிறுவனத்திற்கு குறித்த தொகை மீதம் ஏற்பட்டுள்ளது. எனினும், ஒரு சில சந்தர்ப்பங்களில் கோரப்படுகின்ற தொகையை விடவும் உண்மைச் செலவினம் கூடுதலாக உள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. எதிர்வரும் காலங்களில் வித்தியாசங்கள் ஆகக் குறைவான ஏற்படும் விதத்தில் முற்பணத் தொகைகளை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். **ஈ. கஹகொல்ல காணி** கஹகொல்ல காணியை இலங்கை தரைப்படையிடம் உரிமை மாற்றிக் கொடுப்பதற்க அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ள இல. CP/18/0487/733/008 மற்றும் 2018.04.10 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானம் தொலை தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் இல. MTDI/SEC/09-GEN(Vol.II) மற்றும் 2018.05.23 ஆம் திகதிய கடிதம் பணியகத்தினால் தொலைத் தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு

(உ) பணியகத்தினால் தங்காலை மற்றும் குருநாகல் காணிகள் அபிவிருத்தி செய்யும் விடயத்திற்காக ரூபா 309,600,107 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2017 அக்தோபர் வரை இக்காணிகளை உரித்தாக்குவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பணியகத்தினால் பணிப்பாளர் சபை தீர்மான இல. 29:04:10 உடைய தீர்மானத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திடம் 20 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை 2013.01.23 ஆம் திகதி செலுத்தியுள்ளதுடன் தற்போது இந்தக் காணியின் உரித்து பணியகத்திடம் காணப்படுவதனால், இலங்கை தரைப்படையிடம் இக்காணியினை உரித்து மாற்றிக் கொடுப்பதற்கு முன்னர் பணியகத்தினால் செலுத்தியுள்ள 20 மில்லியன் ரூபா தொகையினை குறித்த நிறுவனத்திடம் இருந்து பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி இல. AD/02/15/228/2012 மற்றும் 2018.05.23 ஆம் திகதிய கடிதம் பணியகத்தினால் தொலைத் தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. **உ**.) தங்காலை காணியை வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சிடம் உரிமை மாற்றிக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரினால் காணி ஆணையாளர் நாயகத்திற்கு இல. MFE/DEV/5/6/2 மற்றும் 2016.06.28 ஆம் திகதிய கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

	அதன் பிரகாரம் இக்காணி வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் விடுவிப்பது பொருத்தமானது என அனுமதியளித்து, உரிமை மாற்றுவதுடன் தொடர்புடைய சிபாரிசுகள் மற்றும் வரி அனுமதி என்பவற்றினை இரத்துச் செய்வதற்குரிய சிபாரிசுகளை சமர்ப்பிக்குமாறு காணி ஆணையாளர் நாயகத்தினால் தங்காலை பிரதேச செயலாளருக்கு இல. 4/10/38198 மற்றும் 2016.08.23 ஆம் திகதிய கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காணியை உரிமை மாற்றுவதற்கான தற்போதைய நிலை பற்றி விசாரித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரினால் காணி ஆணையாளர் நாயத்திற்கு இல. MFE/DEV/5/6/34 மற்றும் 2017.12.06 ஆம் திகதிய கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக காணியை உரிமை மாற்றித் தருவதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இக்காணியை உரிமை மாற்றிக் கொள்ளல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பணிவுடன் அறியத் தருகிறேன். குருணாகல் காணியை உரிமை மாற்றுவதற்கு தேவையான சிபாரிசுகளுடனான ஆவணங்கள் குருணாகல் பிரதேச செயலாளரினால் மாகாண காணி ஆணையாளர் ஊடாக (வடமேல்) காணி ஆணையாளர் நாயகத்திற்கு இல. 4/5/1/47 மற்றும் 2016.09.28 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

	அதன் பிரகாரம் காணி ஆணையாளரினால் (வடமேல் மாகாணம்) இந்த ஆவணங்கள் வடமேல் மாகாண விவசாயம், காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்கு உற்பத்தி, சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் வடமேல் மாகாண பிரதம அமைச்சின் செயலாளருக்கு இல. NWP/AGR/ES9/17 மற்றும் 2016.10.28 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் இக்காணியை பெற்றுத் தர முடியாதென அறிவிக்கபபட்டுள்ளது. எவ்வாறாயினும் இக்காணியை உரிமை மாற்றிக் கொள்வது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அனைத்து விடயங்களும் இடம்பெற்றுள்ளமையினால் கௌரவ வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அவர்களினால் கௌரவ வடமேல் மாகாண முதலமைச்சருக்கு இல. MFE/DEV/5/6/16 மற்றும் 2016/12/07 ஆம் திகதிய கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதுடன் அதன் மூலம் குறித்த காணியை உரிமை மாற்றித் தருவதற்கு தேவையான நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இக்காணியை விடுவிக்க முடியாதென வடமேல் மாகாண காணி ஆணையளரினால் குருணாகல் பிரதேச செயலாளருக்கு 2017/01/10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளதுடன் அதன் பிரதியொன்று பணியகத்திற்கு அனுப்பி

(ஊ) பணியகத்தினால் பயிற்சி நிலையம் ஒன்று அமைப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிடிபன மகாசேனவத்த என்ற 05 ஏக்கர் காணி 50 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2010 நவம்பர் 03 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2010 ஜனவரி 15 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளக பெறுமதி மதிப்பீட்டுக் குழுவினால் ரூபா 52 மில்லியனிற்கு பெறுமதி மதிப்பீடு செய்து அப்பணத்தில் 50 சதவீதமாகிய ரூபா 26 மில்லியன் பணியகத்தினால் 2010 பெப்ரவரி 26 ஆம் திகதி செலுத்தி காணியின் பௌதீக உரிமையை பணியகத்திற்கு உரித்தாக்கியிருந்தது. இந்த காணி தொடர்பாக பிரதான பெறுமதி மதிப்பீட்டாளர் மூலம் பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக்கொள்ளாமல் 50 சதவீதத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 04 திகதி வரையும் அக்காணியின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு மற்றும் குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வைக்கப்பட்டுள்ளது. கௌரவ வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அவர்களினால் 2017 சனவரி மாதம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்து இக்காணியை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் உரிமை மாற்றித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இக்காணியை உரிமை மாற்றிக் கொள்வதுடன் தொடர்புடைய பணியகம் மற்றும் அமைச்சு ஆகிய மட்டங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத் தருகிறேன். **ஊ**..) ஹோமாகமை, பிட்டிபண, மாஹேனவத்த எனும் காணியின் ஒரு பகுதியை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு உரிமை மாற்றிக் கொள்வது தொடர்பில் நகர அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் உட்பட உரிய அதிகாரிகளுடன் பணியகத்தின் அதிகாரிகளினால் 2018.04.09 ஆம் திகதியன்று அந்நிறுவனத்தின் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அக்கலந்துரையாடலின் பிரகாரம் 50 வருட குத்தகை அடிப்படையில் பணியகத்திற்கு பெற்றுத் தருவதற்கு உள்ள காணி, காணி மீட்டல் சட்டத்தின் கீழ் அந்த அதிகார சபையிடம் உரிமை மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு உரிமை மாற்றிக் கொண்டதன் பின்னர் பிரதான விலை மதிப்பீட்டாளரினால் விலை

	மதிப்பீடு செய்யப்படுகின்ற பெறுமதியை பணியகத்திடமிருந்து அறவிட்டுக் கொண்டதன் பின்னர் பணியகத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்குரிய குத்தகை ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இல. 10/8/3282 மற்றும் 2018.04.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள் --- பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (அ) பணியகத்தின் குறிக்கோள்களில் இலங்கையர்களுக்கு இலங்கைக்கு வெளியே வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களின் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன அடங்கியிருந்த போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பணியகத்திற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த தொழில் கட்டளைகள் எண்ணிக்கையில் 50 சதவீதம் வரையேனும் தொழிலாளர்களை அனுப்புவதற்கு பணியகத்திற்கு முடியாதுள்ளது.	**அ)** தொழில் கட்டளையொன்றில் உள்ளடக்கப்படுவது சம்பந்தப்பட்ட வெளிநாட்டு ஊழியர்களுக்கு தேவைப்படும் என கருதுகின்ற மதிப்பீடு செய்யப்பட்ட தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையாகும். ஒரே ஊழியர் இந்தத் தேவையினை பல வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களிடமும் ஊழியர்களை அனுப்புகின்ற நாடுகளிடமும் வழங்குகின்றார். இவ்வாறான செயற்பாட்டின் காரணமாக அனுமதிக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களுக்கான கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் உள்ள வெற்றிடங்களின் தொகை மற்றும்
(ஆ) 2008 ஆம் ஆண்டிற்கு நேரொப்ப 2012 ஆண்டின் போது வெளிநாட்டு வேலை கட்டளைகளின் குறைவடைதல் 40 சதவீதமாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும் 2014 ஆம்	

ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை அது படிப்படியாக போது கீழிறங்கியிருந்ததுடன் அது 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 34 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது தொழில் சந்தை இழப்பு 73 சதவீதமாகும். 2008 ஆம் ஆண்டின் போது 16 சதவீதமாக காணப்பட்ட தொழிலாளர் வழங்குதல் 2016 ஆண்டளவில் 32 சதவீதம் வரை அதிகரித்தல் ஒன்றினைக் காட்டிய போதிலும், அது பணியகத்திற்கு செயலாற்றுகையின் முன்னேற்றத்தின் காரணமாக ஏற்பட்டதன்றி வெளிநாட்டு வேலை வாய்ப்பு சந்தையில் இலங்கை தொழிலாளர்களுக்கு காணப்பட்ட கேள்வி குறைந்திருத்தல் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	உண்மையான வெற்றிடங்களின் கீழ் வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் தொகை என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற வித்தியாசத்தை தவிர்ப்பதற்கு முடியாதுள்ளதுடன் அது பணியகத்தின் பலவீனமன்று.
	(ஆ) இவ்வாறான நிலைக்கு மேற்படி (அ)வில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு தொழிற் சந்தையில் சந்தர்ப்பங்கள் குறைவதற்கான காரணமாக பின்வருவனவற்றையும் குறிப்பிடலாம். i. வெளிநாட்டு தொழில் வாய்ப்பு சந்தைக்கு புதிய நாடுகள் நுழைதல் மற்றும் அந்நாடுகளினால் குறைந்த சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகளின் கீழ் ஊழியர்களை வழங்குவதற்கு முன்வருகின்றமை என்பன காரணமாக தொழில் வாய்ப்புக்கள் அவர்களின் பக்கம் செல்லல். ii. ஒரு சில நாடுகளில் வெளிநாட்டு தொழிலாளர்கள் பற்றிய வீசா கொள்கைகளில் மாற்றம் ஏற்படல். iii. வெளிநாட்டு தொழிலாளர்களுக்காக திறந்து விடப்பட்டிருந்த சில தொழில் வாய்ப்புகளுக்கு உள்நாட்டைச் சேர்ந்தவர்களை பதிலீடு செய்வதற்கு ஒரு சில நாடுகள் எடுத்துள்ள கொள்கை ரீதியான தீர்மானங்கள். iv. வெளிநாட்டு தொழிலாளர்களை பெற்றுக் கொள்கின்ற சில நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான ஸ்திரமற்ற தன்மைகள்
(இ) பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் அதிகமாக வெளிநாட்டு தொழில் சந்தைக்கு அனுப்புவதற்காக கிராமிய மட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இரத்திரனபுரி மற்றும் காலி மாட்டங்களை மத்திய மயப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த முன்னோடிச் செயற்திட்டங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் அம்மாவட்டங்களில் இருந்து கூட்டிணைப்பு உத்தியோகத்தர்கள் முறையே 06 மற்றும் 04 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். 2016 ஆண்டின் போது ரூபா 30,000 இற்கான படி ஒன்று செலுத்துவதற்காக சேர்க்கப்பட்டிருந்த அந்த உத்தியோகத்தர்கள் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 07 ஆம்	**(இ)** பயிற்றப்பட்ட ஊழியர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு அனுப்புதல் மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றுக்காக

	பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 2,344,000 இற்கான செலவு ஒன்று பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அந்த முன்னேற்றம் செயற்திட்டதின் காலம் முடிவடைந்து இருந்த போதிலும் அது தொடர்பான செயற்திட்டத்தின் முன்னோடி தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கைகள் ஏதும் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டல் கருத்திட்டங்களின் சேவைக்காக பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் 10 ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். பயிற்றப்பட்ட ஊழியர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு அனுப்புதல் மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றுக்காக இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டல் கருத்திட்டங்களில் முன்னாள் பொது முகாமையாளரினால் (சந்தைப்படுத்தல்) முன்வைக்கப்பட்ட “Concept Note” அடிப்படையாகக் கொண்டு நிருவாகம் மற்றும் மனிதவள பொது முகாமையாளரினால் இரத்தினபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டல் கருத்திட்டத்திற்காக 06 ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், இல. 144/2015 (M-8) மற்றும் 2015.12.23 ஆம் திகதிய மற்றும் இல. 80/2016 (M-6) 2016.12.24 திகதிய பணிப்பாளர் சபை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பணியகத்தின் பணிப்பாளர் சபையினால் வழங்கிய அனுமதியின் பிரகாரம் இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட வழிகாட்டல் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பணி மாத்திரம் நிருவாகம் மற்றும் மனிதவலு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட கடமைகளுடன் தொடர்புடைய மாதாந்த அறிக்கைகளின் பிரகாரம்

	அதன் முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு சந்தைப்படுத்தும் மற்றும் ஆட்சேர்ப்பு (பொது) ஊடாக பின்வரும் குழுக்கள் இனங்காணப்பட்டு ''திறமைகளினால் வலுவூட்டப்பட்ட வெளிநாட்டு தொழில் வாய்ப்பொன்று'' எனும் தலைப்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குழு A - தேர்ச்சி மற்றும் அனுபவமிக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு எதிர்பார்ப்பாளர்கள் குழு B - தேர்ச்சியற்ற அனுபவம் மாத்திரம் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு எதிர்பார்ப்பாளர்கள் குழு C - தேர்ச்சி மாத்திரம் உள்ள போதிலும் சேவை அனுபவம் இல்லாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு எதிர்பார்ப்பாளர்கள் குழு D - தேர்ச்சி மற்றும் அனுபவம் ஆகிய இரண்டும் இல்லாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு எதிர்பார்ப்பாளர்கள்
(ஈ) அமைச்சர் சிங்கப்பூரிலிருந்து பெற்றிருந்த மருத்துவ சிகிச்சைக்காக செலவிடப்பட்ட 989.25 சிங்கப்பூர் டொலர்கள் (அண்மித்த ரூபா 102,993 தொகை) பணியகத்தின் நலன்புரி நிதியத்திலிருந்து மேற்கொள்ள முடியாதெனினும் அப்பணத்தை வேறு ஒரு உத்தியோகத்தரின் பேரில் அமைச்சருக்காக மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது.	**(ஈ)** பணிப்பாளர் சபை பத்திர இல. 13/2016 இன் கீழ் 2016.01.28 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது.
4.4 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்திய மூலவளங்கள் --- பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.	
(அ) அகற்றுவதற்கு ஒதுக்கியிருந்த பணியகத்தின் 27 வாகனங்களின் 2015 ஜூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	

(ஆ) மூடப்பட்டிருந்த பயிற்சி நிலையங்களின் 07 பண்ட விடயங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

அ) அதன் பிரகாரம், அகற்றுவதற்குள்ள பணியகத்திற்கு சொந்தமான 27 வாகனங்களில் 12 வாகனங்கள் அகற்றல் குழுவின் விலை மதிப்பீடு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் சிபாரிசு என்பவற்றின் மீது அவற்றினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த 12 வாகனங்களில் 05 வாகனங்கள் மாத்திரம் தற்போது அகற்றப்பட்டுள்ளன. எஞ்சிய ஏனைய வாகனங்களை அகற்றுவதற்கு விலை மதிப்பீடு செய்ததன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆ) மூடிவிடப்பட்ட பணியகத்தின் பயிற்சி நிலையங்களில் பயன்படுத்திய பயிற்சிப் பிரிவிற்கு சொந்தமான பொருட்களை அண்மையில் உள்ள பயிற்சி நிலையங்களுக்கு அல்லது தலைமை அலுவலகத்தின் பயிற்சிப் பிரிவிற்கு மாற்றப்பட்டதுடன் தேவைகளுக்கு ஏற்ப கோரிக்கை விடுக்கப்படுகின்ற பயிற்சி நிலையங்களுக்கு அவ்வாறான பொருட்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

பொருள் வகை	அளவு	மீள ஒப்படைத்த திகதி	மீள ஒப்படைத்த பயிற்சி நிலையம்
டோஸ்டர்	01	2016.12.29	இரத்தினபுரி ப.நி.
ரீ கப் செட்	01	2016.12.29	”

ரயிஸ் குக்கர்	03	2016.12.29	”
ஜாசர்	02	2016.11.28	”
கிரைன்டர்	01	2016.12.29	”
மைக்ரோவேவ் அவன்	01	2016.12.30	”
பால் போத்தல் அவிக்கும் இயந்திரம்	01	2016.12.30	”
மின் கேத்தல்	01	2016.11.03	குருநாகல் ப.நி.
அவன்	01	2016.11.03	”
தொலைக்காட்சி	01	2016.11.03	”

“சிரமிக சுரெகும” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் 243912 ஊழியர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 2017.12.31 திகதியாகும் போது மேலும் 34408 பேர் பதிவு செய்து கொண்டுள்ளனர். அதன் பிரகாரம் 2017.12.31 ஆம் திகதியாகும் போது பதிவு செய்து கொண்டுள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 278,320 ஆகும்.

அதன் பிரகாரம் அவதானம் செலுத்தும் போது பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் இங்கு செயற்திறன் பற்றிய பிரச்சினையொன்று எழ மாட்டாது என்பதனையும் பணிவுடன் அறியத்தர விரும்புகின்றேன்.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்பிற்காக வெளியே செல்லும் மற்றும் சேவை செய்த பின்னர் நாட்டுக்கு வரும் இலங்கையர் தொர்பான தரவு வங்கி ஒன்று நிறுவி பேணப்படுவதற்காக பணியகம் செயற்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2016 ஜனவரி 08 முதல் 14 வரையான காலப்பகுதியில் பதிவுகளை மேற்கொள்வதற்காக செயற்படுத்திய விளம்பர விடயங்களுக்காக பணியகம் ரூபா 8,274,964 தொகை செலவிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அக்காலப் பகுதியல் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது 563,768 வெளிநாடு சென்றிருந்த

தொழிலாளர்களில் 25 சதவீதமேனும் மேற்கூறிய தரவு வங்கியில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ஆக்கபூர்வமாக இருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. **4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்** --- பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (அ) வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பிரயாணங்கள் தொடர்பாக பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 463,481 தொகை அமைச்சின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி செய்யப்பட்டமையினால் அமைச்சினால் மீளளிப்பு செய்வதனை நிராகரிக்கப்பட்டிருந்தது.	**(அ)** கௌரவ அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுப் பயணங்களின் பிரதான குறிக்கோளாக அமைவது வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறைக்கு மற்றும் குடியகழ்ந்த ஊழியர்களுக்கு நலன்புரி வசதிகளை பெற்றுக் கொடுக்கும்

	நோக்கில் இரு தரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்பன தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்வதும், குடியகழ்ந்த ஊழியர்களின் நலன்புரி வசதி பற்றி தேடிப் பார்ப்பதும், தொழில் மேம்பாட்டு பணிகள் உள்ளிட்ட குடியகழ்ந்தோர் துறையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதும் என்பதனால் குறித்த தூதரகங்களின் தொழிலாளர் நலன்புரி பிரிவுகளினால் இது பற்றிய நேரடியான தலையீடுகள் இடம்பெறுவதனால் அவ்வாறன பணிகளுக்காக உத்தியோகபூர்வ விஜயங்களின் போது தூதரக தலைமை அதிகாரியின் கோரிக்கையின் மீது துரிதமாக உரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான செலவினங்கள் பணியகத்தின் சம்பந்தப்பட்ட தொழிற்பாட்டு திட்டத்தின் தூதுக்குழுக்களை இந்நாட்டிலிருந்து அனுப்புவதற்கு ஒதுக்கியுள்ள ஏற்பாடுகளிலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
(ஆ) பணியக சட்டத்தின் 53(3) பிரிவிற்கு புறம்பாக பணியகத்தினால் பெயர் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் ஊடாக பதிவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டு உள்ளக சுற்றறிக்கை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பதிவுக் கட்டணமாக பணியகத்தினால் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 70 சதவீதம் அதாவது ரூபா 31,612,000 தொகை மற்றும் ரூபா 91,623,000 தொகை என கூட்டுத்தொகை ரூபா 123,235,000 தொகை அதாவது அவ்வாறு பெயர் குறிப்பிட்ட தனியார் முகவர் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தமையால் பணியகம் அந்த வருமானத்தை இழந்துள்ளது.	எவ்வாறாயினும் தற்போது கௌரவ அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பாக பணியகத்தின் யாதேனும் ஒரு தலையீடு தேவைப்படின் நேர் வரிசை அமைச்சின் செயலாளரின் ஆலோசனை மற்றும் அனுமதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.
(இ) கொரிய தொழில் பெறுவோருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்வதற்காக தேவைப்படும் நிருவாக சேவைகள் வழங்கும் விடயங்களுக்காக குறிப்பிட்ட மாதத்திற்கான மருத்துவ கட்டண வருமானத்தில் 25 சதவீதம் பணியக நிருவாக கம்பனிக்கு செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. அதன் பிரகாரம்	**(ஆ)** தனிப்பட்ட முறையில் வெளிநாடுகளுக்கு செல்கின்ற நபர்களை முகவர் நிறுவனங்கள் ஊடாக பதிவு செய்து கொள்ளுமாறு எதுவித உள்ளக சுற்றறிக்கையும் பணியகத்தினால் வெளியிடப்படவில்லை. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக சட்டத்தின்

கம்பனி ரூபா 9,507,988 இற்கான வருமானம் ஒன்றின் உழைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட அனைத்து நிருவாக விடயங்களும் பணியகத்தின் ஆட்சேர்ப்பு பிரிவினை மேற்கொள்ளப்பட்டிருந்தது.	பிரகாரம் முகவர் நிறுவனம் ஒன்றின் ஊடாக பதிவு செய்து கொள்ளும் போது பதிவுக் கட்டணத்தில் 70% அந்நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டி உள்ளமையினால் அவ்வாறு குறித்த முகவர் நிறுவனங்களுக்கு 70% தொகை செலுத்தப்பட்டுள்ளது. **(இ)** இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமானது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு சொந்தமான முழுமையான நிருவாகத்தின் கீழ் வருகின்ற அரச கம்பனியொன்றாக காணப்படுவதுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் இலாபம்/ நட்டம் பணியகத்தின் இலாபத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படுவதுடன், கெரிய தொழில் வாய்ப்பு எதிர்பார்ப்பாளர்களின் மருத்துவ பரிசோதனை அறிக்கையினை பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டினை ஒருங்கிணைத்துக் கொள்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியை பயன்படுத்துவதற்கு அதன் நிருவாக நிறுவனம் என்ற வகையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுத்ததுடன் அதற்காக பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன. 1. குறித்த ஊழியரின் மருத்துவ அறிக்கையினை உரிய மருத்துமனையிலிருந்து துரிதமாக பெற்றுக் கொண்டு அப்பணியினை வினைத்திறனாக மேற்கொள்ளல் மற்றும்

4.7 வேறு நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த பணியகத்தின் மூலவளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டின் போது பணியகத்தினால் வரிசை அமைச்சுக்கு 07 உத்தியோகத்தர்களும் நிருவாக கம்பனிக்கு 03 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள் படிகளாக ரூபா 5,308,240 தொகை பணியகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அது தவிர சப்பிரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

2. பணியகத்தின் ஆட்சேர்ப்பு பொறிமுறையான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் ஆட்சேர்ப்புக்களின் மீது மாத்திரம் உழைக்கின்ற வருமானம் மாத்திரம் அதனை நடாத்திச் செல்வதற்கு தற்போது போதியதாக இல்லாத காரணத்தினால் அதில் காணப்படும் மனித வளங்களை தொடர்ந்தும் ஈடுபடுத்தி அந்நிறுவனத்திற்கு யாதேனும் ஒரு வருமான வழியினை ஏற்பாடு செய்தல்.

அவ்வாறே 2016 ஆம் ஆண்டில் 47.1 நாட்களான இலங்கையின் பதிலளிக்கும் காலப் பகுதி (Responsive Period) தற்போது 29.1 வரையில் குறைத்துக் கொள்வதற்கு முடிந்துள்ளமையினால் அப்பணியினை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக தொடர்ந்தும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் சேவை தேவைப்படாதென விளங்கியமையினால் 2017.08.04 ஆம் திகதி முதல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் சேவை முடிவுறுத்தப்பட்டது.

2016.12.31 ஆம் திகதியன்று வெளிநாட்டு முகவர் நிறுவனக் கம்பனியின் பணிக்காக இணைக்கப்பட்டிருந்த பதவியணி

	பெயர்	பணியகத்தில் வகிக்கும் பதவி
01	திரு. ஏ.எம்.என் உமாரத்	நிருவாக உத்தியோகத்தர்
02	செல்வி. எல்.சீ.டீ. சிகேரா	நிருவாக உத்தியோகத்தர்
03	திருமதி. சீ. ரணசிங்க	நிருவாக உத்தியோகத்தர்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன கம்பனி பணியகத்தின் கீழ் இயங்கி வருகின்ற துணை நிறுவனம் ஒன்றாக உள்ளதுடன், சேவை தேவைகளின் நிமித்தம் பணியகத்தினால் மேற்படி பதவியணி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியுடன் இணைக்கப்பட்டிருந்தது. 2016.12.31 ஆம் திகதியன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனிக்கு இணைக்கப்பட்டிருந்த மேற்படி உத்தியோகத்தர்களில் தற்போது திரு. ஏ.எம்.என் குமாரத் அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியுடன் இணைந்து பணியாற்றி வருகின்றார்.

2016.12.31 ஆம் திகதியன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் இணைக்கப்பட்டிருந்த பதவியணி

	பெயர்	பதவி
01	திருமதி. சீ. ரணசிங்க	நிருவாக உத்தியோகத்தர்
02	திருமதி. பீ.யு. குணசேகர	பொது உதவியாளர்
03	திருமதி. பி.யு. ஹெட்டிகே	முகாமைத்துவ உதவியாளர்
04	திரு. எம்.ஜீ.டி. சதருவன்	அலுவலக உதவியாளர்
05	திரு. எஸ்.டீ.சீ. மதுரங்க	அலுவலக உதவியாளர்
06	திரு. ஆர். ஏ. கிஹான்	சாரதி
07	திரு. ஜீ.எச்.எம். நவருவன்	சாரதி

கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன்.

சேவை தேவையின் நிமித்தம் மேற்படி பதவியணி வெளிநாட்டு

(ஆ) பணியகத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சில் விடயங்களுக்காக 04 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 3,292,242 தொகை செலவிடப்பட்டிருந்தது.	வேலைவாய்ப்பு அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் 2018.02.28 ஆம் திகதி முதல் அப்பதவியணியானது பணியகத்தின் சேவைக்காக மீண்டும் சமூகமளித்துள்ளனர். **சப்ரகமுவா மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த பதவியணி** சப்ரகமுவா மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் சப்ரகமுவா மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் பணியகத்திற்கு மீள் நிரப்பு செய்து கொள்ளும் அடிப்படையின் மீது பின்வரும் பதவியணியினர் சப்ரகமுவா மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டனர்.

	பெயர்	பதவி
01	திருமதி. தினேசா நிசானி	பொது உதவியாளர்
02	திரு. ஏ.எம்.ஏ.என்.பீ. திசாநாயக்க	சாரதி

இப்பதவியணிக்கு 2017 டிசம்பர் மாதம் வரையில் செலுத்திய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் சப்ரகமுவா மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் பணியகத்திற்கு மீள் நிரப்புச் செய்யப்பட்டுள்ளது.

4.8 பதவியணியின் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 1248 ஆக இருந்ததுடன் பதவிநிலை, பதவிநிலை அல்லாத மற்றும் ஏனைய தொகுதிகளைச் சேர்ந்த முறையே உத்தியோகத்தர்கள் 81, 38 மற்றும் 11 இற்கு பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் சிற்றூழியர்கள் 46 பேர் மிகையாக காணப்பட்டனர்.

(ஆ) பணியகத்தினால் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பணிகளுக்காக ஒதுக்கியிருந்து 04 வாகனங்கள் தற்போது தலைமை அலுவலகத்தின் வாகன குழுமத்திடம் மீளப் பெறப்பட்டுள்ளது.

அ) 2016.12.31 திகதியன்று சிற்றூழியர் பதவியணி

பதவி	அனுமதிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	
		நிரந்தர	ஒப்பந்த
தொழில்நுட்பவியலாளர்/ நீர் குழாய் தொழில்நுட்பவியலாளர் / வளி சீராக்கி தொழில்நுட்பவியலாளர்	3	4	1
சாரதி	65	77	4

அலுவலக உதவியாளர்	155	94	89

2014.11.12 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 25/2014 ஊடாக நிரந்தர சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்ட பதவியணி

வளி சீராக்கி தொழில்நுட்பவியலாளர்	02
மின்சார தொழில்நுட்பவியலாளர்	02
சாரதி	37
அலுவலக உதவியாளர்	16

2014.11.12 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல். 25/2014 ஊடாக தற்காலிக, அமய, பதிலீட்டு, ஒப்பந்த அல்லது நிவாரண அடிப்படையின் மீது ஆட்சேர்ப்பு செய்துள்ள 180 நாட்கள் சம்பூர்ணமான பதவியணியை நிரந்தர சேவைக்கு உள்ளீர்ப்பு செய்தமை காரணமாக சிற்றூழியர் எண்ணிக்கையில் ஊழியர்களின் மிகை ஒன்று காட்டப்படுவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இல. DMS/1727/III மற்றும் 2017.08.09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 25/2014 இன் கீழ் நிரந்தர பதவி வழங்கப்பட்ட பதவியணியானது அப்பதவியை வகிப்பவருக்கு மாத்திரம் தனிப்பட்டவாறு அமையும் வகையில்

(ஆ) மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்படாத 05 பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் 44 பேர் ரூபா 17,892,771 இற்கான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

அனுமதித்துள்ளதாக பணியகத்திற்கு அறிவித்துள்ளது.

அவ்வாறே, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இல. DMS/1727/IV மற்றும் 2018.01.28 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் பணியகத்திற்கு அலுவலக உதவியாளர்கள் பதவிகள் 25 அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சிற்றூழியர் எண்ணிக்கையில் தற்போது பதவியணி மிகை ஒன்று காட்டப்படவில்லை.

ஆ)

	பதவி	**அலுவலர்களின் எண்ணிக்கை**	**2016 ஆண்டு காலப் பகுதியினுள் செலுத்திய சம்பளம் மற்றும் கொடுப்பனவு**
01	தொழில்நுட்பவியலாளர்	01	

02	சாரதி	04	
03	அலுவலக உதவியாளர்	28	
04	ஒருங்கிணைப்பு அலுவலர்	10	
05	பொது தொழில்நுட்பவியலாளர் (ஒப்படைப்பு அடிப்படையில்)	01	

1. தொழில்நுட்பவியலாளர்
2. சாரதி
3. அலுவலக பணியாளர்

2014.11.12 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 25/2014 இன் பிரகாரம், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய பதவியணியை நிரந்தர சேவைக்கு உள்ளீர்ப்பு செய்தமை காரணமாக சிற்றூழியர்கள் எண்ணிக்கையில் மிகை ஒன்று காணப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பணியகத்தற்கு அனுப்பி வைக்கப்பட்ட இல. DMS/1727/III மற்றும் 2017.08.09 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக பொது நிருவாக சுற்றறிக்கை இல. 25/2014 இன் கீழ் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பதவியணிக்கு அப்பதவியினை வகிப்பவருக்கு மாத்திரம் தனிப்பட்டவாறு அமையும் வகையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

4. ஒருங்கிணைப்பு அலுவலர்

(இ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் தூதரக சபைக்கான பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு

முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இனை புறம்பாக பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றின் பிரகாரம் ஆட்சேர்ப்புகள் நடைபெற்றுள்ளன.	சந்தைக்கு அனுப்புதல் மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றுக்காக இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட முன்னோடி கருத்திட்டத்தின் சேவைக்காக பணியக பணிப்பாளர் சபையின் அனுமதியின் பிரகாரம், ஒருங்கிணைப்பு அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். 5. பொது தொழில்நுட்பவியலாளர்கள் பணியகத்தின் பல்வேறு பராமரிப்பு பணிகளுக்காக பணிப்பாளர் சபையின் அனுமதியின் மீது பொது தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக நபர் ஒருவர் ஒப்படைத்தல் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன், அவரது ஒப்படைப்பு கால எல்லை 2017.09.30 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.
6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் --- கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.	**(இ)** தற்போது வெளிநாட்டு தூதரக பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யும் போது பின்பற்றப்படுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறை 2010 ஆம் ஆண்டிலே வெளிநாட்டு தூதரக பதவியணிக்காக அனுமதிக்கப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையாகும். பணியகத்தினால் வெளிநாட்டு தூதரகங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது கடைபிடிக்கின்ற, ஏற்கனவே அரச கணக்காய்வு பிரிவிடம் வழங்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது முன்னர் பேணி வந்த ஆவணங்களை பரீட்சிக்கும் போது உறுதிப்படுத்தப்படுகின்றது.
**முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப்	**அவதானிப்புக்கள்**

பரப்பு		
(அ) கணக்கீடு	(i) பணியகத்திற்கு கிடைக்க வேண்டிய மற்றும் பணியகத்தினால் செலுத்தப்பட வேண்டிய மீதிகளை தீர்ப்பதில் தாமதம் காணப்பட்டமை.	
	(ii) வெளிநாட்டு தூதரக சபைகளின் மூலம் உழைக்கப்படும் வருமானத்தை சேகரித்தல் மற்றும் ஆக்கபூர்வமான வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு அப்பணம் சேவைகள் வழங்குவதற்கு பயன்படுத்தப்படாமை.	
(ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு -	(i) காணிகள் கொள்வனவு செய்யும் போது முறையான உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.	
	(ii) வெளிநாட்டு தொழில் முகவரி நிலையங்களின் விடயங்களை கட்டுப்படுத்துவதற்கு மற்றும் நிருவகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை	

(இ) மனிதவள கட்டுப்பாடு - பணியகத்திற்கு சொந்தமான வளாக மற்றும் மனித வளக் கட்டுப்பாடு மற்றும் பயன்படுத்தல் முறைப்படி நடைபெறாமை.	

54



ශ්‍රී ලංකා විදේශ සේවා නියුක්ති කාර්යාංශය
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
Sri Lanka Bureau of Foreign Employment



தலைமை அலுவலகம்

234, டென்சில் கொப்பகடுவ மாவத்தை
கொஸ்வத்த, பத்தரமுல்ல, இலங்கை

தொலைபேசி

+94 11 286 4101 - 105 / +94 11 288 0500

மின்னஞ்சல்

info@slbfe.lk

வலைத்தளம்

www.slbfe.lk